உ

VĒDARANIYAT TALA VARALAR

சிவமயம்

# வேதாரணியத் தல வரலாறு

6 FEB 1955
MADRAS

by

வேதாரணியம் :

உயர் சைவத் திருவாளர்

**வே. ந. வேதநாயகம் பிள்ளை**

அவர்கள்

**அறுபதாம் ஆண்டு நிறைவு விழா**

**நினைவு மலர்**

APPADURAI DESIKAR (M)

வேதாரணியம் :

**மு. சு. அப்பாத்துரை தேசிகர் அவர்கள்**

எழுதியது.

சென்னை :

ரத்னம் அச்சகத்தில் அச்சிடப்பெற்றது.

**1953.**



உயர் திருவாளர் :

வே. ந. வேதநாயகம் பிள்ளை அவர்கள்

திருவுருவப் படம்.

..6 FEB 1955
MADRAS

உ

சிவமயம்

# முகவுரை

பார்பதம் அண்டம் அனைத்துமாய்ப் பரந்த படரொ ரீப் பரப்பாகவும், பஞ்ச பூதங்களாகவும் விளங்கும் அகண்ட சச்சிதானந்தப் பரம்பொருளாகிய இறைவன் ஆன் மாக்கட்கு அருள் செய்வான் வேண்டிக் "காணாத அருவி னுக்கும் உருவினுக்கும் காரணமாகிய நிகழ் குறியாம் இலிங் கத் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் பல தென்னாட்டின்கண் உள்ளன; எந் நாட்டின் கண்ணும் உள்ளன. இது பற்றியே நம் மணிவாசகப் பெருந்தகை யாரும் தென்னாடுடைய சிவனே போற்றி, எந் நாட்டவர்க் கும் இறைவா போற்றி" என்று திருவாய் மலர்ந்தருளி யுள்ளனர்.

தென்னாட்டுத் திருத்தலங்கள் பலவற்றுள்ளும் சிறந்த தாய், நான்கு வேதங்களும் வந்து பூசித்ததாய், அகத்தியர்க் குத் திருமணக் கோலம் காட்டியதாய், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், முதலியோரால் திருப்பதிகம் பாடப் பெற்றதாய், முனிவரும் மன்னரும் பூசித்துப் பேறு பெற்றதாய், தாயுமானவரும், பரஞ்சோதி முனிவரும் அவ தாரம் செய்ததாய், மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் அமையப் பெற்றதாய், தமிழ்ச் சொல்லின் ஏற்றத்தை எடுத் துக் காட்டும் இலக்காய் (மறைக் கதவினைத் திறந்ததுந் தண் டமிழ்ச் சொற்களோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்!) இலங்குகின்ற திருத்தலம் திருமறைக்காடு என்னும் வேதா ரணியமாகும்.

வேண்டுவார் வேண்டுவதே ஈவானாகிய ஸ்ரீ வேதவனப் பெருமானின் திருவருட் செயல்களும், வேதவனத்தின் சிறப்பும் வடமொழியில் உள்ள பிரமகை வர்த்தம் என்ற புராணத்துள் தொண்ணூற்றி யொன்பது (99) அத்தியா யத்தில் கூறப்பெற்றுள்ளது.

"வேதவனத்தல வரலாறு" என்ற நூலை அன்புடன் அச்சிட்டு வழங்குகிறார்கள்.

இன்பம் பெருகும் இயல்பினோடு வாழ்பவர் பரம் பரைச் சைவர்.

வாழ்வெனும் மையல் விட்டு
வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மையோடுஞ்
சைவமாஞ் சமயஞ் சாரும்
ஆகூழ் பெற்றவர் வாணிகஞ் செய்வார்க்கு
வாணிகம் பேணிப் பிறவுந்தம் போற்செயல்.

என்ற வள்ளுவர் வாக்கின்படி வாணிகஞ் செய்து வருபவர், நீதிநெறி நிற்பவர், திரிகரணத்தாலும் தீமையின்றி வாழ் பவர், வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வரும் சீலர் உயர் திருவாளர் **வே. ந. வேதநாயகம் பிள்ளை** அவர்கள் "சிந்தனை நின்தனக் காக்கி என்று கூறும் மணிவாசகரைப்போன்று என்றும் எத் தொழிலைச் செய்யினும் இறை சிந்தனையா கவே இருந்து வருபவர்கள். இவர்கள தமது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் இத்தல வரலாற்றை வெளியிட வேண்டுமென அளவிறந்த அவா மேலீட்டால் எழுதுவித்து வெளியிட முன்வந்தார்கள்..........

வேதாரணியத் தல வரலாற்றை, வடமொழியிலுள்ள மூல நூலை ஆராய்ந்து, இந் நூலை இனிய தமிழ் நடையில்

மிக நுணுக்கமான செய்திகளை விளக்கமாக எழுதினவர் வேதவனம், சைவாசாரிய பரம்பரை மு. சு. அப்பாத்துரை தேசிகர் அவர்கள். இவ்வரும் பெருநூலை எல்லோரும் பெற்றுப் பயின்று இம்மையாதி இன்பங்களையும், எண்ணில் மறுமை இன்பத்தையும் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

இந் நூலை இவ்வளவு சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கும் உயர் திரு பிள்ளை அவர்கள் இன்னும் பன்னாள் இத்தகைய அறங்கள் பலவற்றையும் செய்துகொண்டு மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீ வேதவனப் பெருமானின் திருவடித் தாமரைகளை மன மொழி மெய்களால் இறைஞ்சுகின்றேன். நலம்.

இங்ஙனம்

நாகை, 1-2-'53

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்'
தேசிய உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
வித்வான்: வை. மு. சண்முக தேசிகன்.

6 FEB 1955 MADRAS

# பொருளடக்கம்

பக்கம்

1. முகவுரை ... iii
2. முன்னுரை ... ix
3. கடவுள் வாழ்த்து ... xiii
4. நாரதர் மாந்தாதாவுக்கு ஆதிசேதுவைப்பற்றிக் கூறல் ... 2
5. ஆதி சேது என்ற பெயர் வந்த வரலாறு ... 3
6. வேதாரணியம் என்ற பெயர் வந்த வரலாறு ... 6
7. வேதாரணியத் தல விசேடம் ... 7
8. அகத்தியருக்குத் திருமணக் காட்சி கொடுத்த வரலாறு ... 8
9. விஸ்வாமித்திரர் வேதவனம் வந்த வரலாறு ... 11
10. திலோத்தமை மானாக மாறிய வரலாறு ... 13
11. விஸ்வாமித்திரர் பூசுரரான வரலாறு ... 14
12. விடங்கர் வேதவனம் வந்த வரலாறு ... 15
13. முசுகுந்தர் விடங்கரை வேதவனத்தில் பிரதிட்டை செய்த வரலாறு ... 16
14. எலி மகாபலிச் சக்கரவர்த்தியான வரலாறு ... 17
15. இராமனுக்கு வீரகத்தி நீங்கிய வரலாறு ... 18
16. சமீவிருக்ஷ முண்டான வரலாறு ... 20
17. வன்னி விருக்ஷத்தின் விசேடம் ... 21
18. திருக்கதவம் திறக்கச் செய்த வரலாறு ... 22

பக்கம்.

| | | |
|---|---|---|
| 19. | கோயில் வரலாறு | .... 24 |
| 20. | சிற்பச் சிறப்புகள் | ... 30 |
| 21. | புராண வரலாறு | ... 31 |
| 22. | தல விசேடம் | .... ” |
| 23. | மூர்த்தி விசேடம் | ... 33 |
| 24. | தீர்த்த விசேடம் | ... 35 |
| 25. | தீர்த்தங்களின் பெயர்களும் ஸ்நானத்தால் அடையும் பயன்களும் | ... 36 |
| 26. | அந்தர்க்கிரக யாத்திரை | .... ” |
| 27. | விஷ்ணு யாத்திரை | ... ” |
| 28. | சேது யாத்திரை | .... 37 |
| 29. | தெக்ஷிணமானச யாத்திரை | ... 38 |
| 30. | பிரம யாத்திரை | ... ” |
| 31. | உத்தரமானச யாத்திரை | ... 39 |
| 32. | வழிபாட்டால் பெறும் பயன்கள் | ... 40 |
| 33. | தலம் பற்றிய தேவாரத் திருப்பதிகங்கள் | ... 41 |
| 34. | வாழ்த்துக்கள் | ... 50 |
| 35. | பிழை திருத்தங்கள். | ... viii |

MADRAS
26 FEB 1955

# பிழைத் திருத்தம்

—:o:—

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 15 | பாஷாண்டி | பாஷண்டி |
| 13 | 10 | ஈசான திக்கில் | அக்னி திக்கில் |
| 15 | 4 | ஒருவாரு | ஒருவாறு |
| ,, | 27 | உபகாரம் | உபசாரம் |
| 20 | 16 | கையலாய | கைலாய |
| 32 | 21 | லோகாதி பதியத்தை | லோகாதி பத்தியத்தை |

26FEB19



சிவமயம்

# வேதாரணியத்தல வரலாறு

## முன்னுரை

விண்ணினர் விண்ணின் மிக்கார்
வேதங்கள் விரும்பியோதப்
பண்ணினர் கின்னரங்கள்
பத்தர்கள் பாடியாடக்
கண்ணினர் கண்ணினுள்ளே
சோதியாய் நின்ற எந்தை
மண்ணினர் வலங்கொண்டேத்தும்
மாமறைக் காடனாரே.

இந்நூல் சோழவள நாட்டில், திருத்துறைப் பூண்டி தாலுக்காவில் மாயவரம் கோடிக்கரை செல்லும் இருப்புப் பாதையில் கிழக்குக் கடற்கரை அருகில் உள்ளதும், வேதங்களால் பூசிக்கப் பெற்றதும், சப்த விடங்கத் தலங்களுள் இரண்டாவதாக உள்ளதும், சமயாச்சாரியர் மூவர்களாலும் பாடப் பெற்றதும், அகத்தியருக்குத் திருமணக் கோலத்துடன் தரிசனம் தந்தருளியதும், மனு, மாந்தாதா, தசரதன் இராமன், பஞ்சபாண்டவர், மகாபலி முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றதும், விஸ்வாமித்திரர், கௌதமர் முதலிய முனி புங்கவர்களால் பூசிக்கப் பெற்றதும், மூர்த்தி, தலம், தீர்த்த விசேடங்களைப் பெற்றதும், மணிகர்ணிகை, வேத நதி, வேதாமிருதம் முதலான (96) தொண்ணூற்றியாறு தீர்த்தங்களைக் கொண்டு விளங்குவதும், பதினாறு சபைகளில் 12-வது தேவ பக்த சபை யென்ற திருநாமமுடைய

தும், சத்தி பீடங்கள் 64-ல் அறுபத்து நான்கில் மிக்க விசேடம் வாய்ந்த சுந்தரிபீடத்தைப் பெற்று விளங்குவதும், மற்றும் பல அளவிறந்த சிறப்புக்களைப் பெற்று விளங்கப் பெறுவதும் ஆகிய வேதாரணியத்தலத்தில் ஆன்மாக்கள் உய்யக் கோயில் கொண்டருள்கின்ற ஸ்ரீ வீணாவாத விதூஷணி அம்பாள் சமேத ஸ்ரீ வேதாரணியேசுவரப் பெருமானது பெருமையைப் பற்றியும், வேதாரணியத் தலம் தீர்த்தம் வழிபட்டுப் பேறுபெற்றார் பெருமைகளையும் கூறுவதாகும்.

வேதாரணியத்தின் மகாத்மியம் வடமொழியில் ஸநற்குமார ஸம்ஹிதை, ஸூதஸம்ஹிதை. காளிகா காண்டம், பிரம்மாண்டம், பிரம்ம கைவர்த்தம், என்ற ஐந்து புராணங்களில் தொண்ணூற்றொன்பதத்தியாயங்களால் விரிவாய் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதனுள் பல கதைகளின் மூலம் யாவர்க்கும் உரியதான கர்மம், தவம், யோகம், பக்தி, ஞானம் முதலான சாதனங்கள் தெளிவாய்ச் சொல்வதாகும்.

வேதவனப் பெருமையையும், ஸ்ரீ வேதாரணியேசுவரர் பெருமையினையும், வேத தீர்த்தம் முதலான தீர்த்தங்களின் பெருமையினையும் கற்றோரும், மற்றோரும், பண்டிதரும் பாமரரும், சிறுவரும், சிறுமியும், அனைவரும் அறிந்துகொள்ளுமாறு தமிழில் சுருக்கமாக எழுதி வெளியிடவேண்டும் என்ற பேரவாக்கொண்டு வேதாரணியம் வடக்கு வீதியில் வாழ்ந்து வருபவரும், பரம்பரைச் சைவரும், சிவஞானச் செல்வரும், சிவ புண்ணியச் சீலரும், குருலிங்க சங்கம பக்தியிற்றலை சிறந்தவரும், சீவகாருண்யம் வாய்ந்தவரும், அறநெறியில் வாணிபம் செய்பவரும், தர்ம சிந்தை உடையவ

ரும், ஆகிய உயர் திருவாளர், வே. ந. வேதநாயகம் பிள்ளை அவர்கள், தமது அறுபதாம் ஆண்டு நிறைவு நினைவு மலராக அன்புடன் இந்நூலை அச்சிட்டு வழங்குகின்றார்கள்.

இந்நூலை எழுதப்பணித்து விரைவில் புத்தக ரூபமாகவும் வெளிவரச் செய்த வேதாரணியம், உயர் சைவத் திருவாளர், வே. ந. வேதநாயகம் பிள்ளை அவர்கட்கு யான் எழுமையும் கடப்பாடுடையேன், உயர்திரு பிள்ளை அவர்களும் அவர் தம் திருமனைவியாரும் அருமை மக்களும் வேதவனப் பெருமான் திருவருளால் எல்லா நலன்களும் நிறைந்தவர்களாய் அரோக திடகாத்திரராய்ப் புத்திர பௌத்திராதியர்களோடு சிவப்பணியும், பொதுநலப் பணியும் பிற பணிகளும் செய்துகொண்டு இவ்வுலகில் நீடூழி வழி வழி சிறந்து வாழ்க! வாழ்க !! வாழ்க !!!

இந்நூலைச் செவ்வையாக அச்சிட்டுக் குறித்த காலத்தில் தந்தருளிய சென்னை, ரத்னம் அச்சகத்தினர்க்கும், கையெழுத்துப் பிரதியை ஆய்ந்து அச்சிடற் கேற்றவாறு திருத்தித் தந்த அறிஞர்க்கும், கையெழுத்துப்படியோடு ஒப்பு நோக்கிப் பிழைதிருத்தஞ் செய்து தந்தவர்க்கும் என் நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்நூலை மெய்யன்புடன் பெற்றுப் பயின்று ஸ்ரீ வேதவனப்பெருமான் திருவருளால் இம்மைமறுமையாதி இன்பங்களையும் பெற்றுய்யுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கின்றேன் நலம்.

இங்ஙனம்:

வேதாரணியம்.
1-2-1953

மு. சு. அப்பாத்துரை தேசிகர்.

CONNEMARA
6 FEB 1955
MADRAS

சிவமயம்

# கடவுள் வாழ்த்து.

## வீரகத்தி விநாயகர்.

நித்தமு மிடையூ றென்னு நெடுங் கொடுங்கா னஞ்சாடி
யத்திமா முகத்தோ னாதி யசுரர் வாரிதி யுழக்கிச்
சத்தியுஞ் சிவமு மேவச் சதுர்மறை வனத்துள்வீர
கத்தியை யுதைத்து நிற்குங் களிற்றினைக் கருத்துள் வைப்பாம்.

## ஶ்ரீவேதாரண்யேஶ்வராதிஸ்தோத்ரம்

வந்தே வேதவனேஶானம் வந்தே வீணாவிதக்ஷிணீம் |
வந்தே த்யாகேஶ்வரம் வந்தே வீரஹத்யா விநாயகம் ||
ராஜநாயஜஹம் வந்தே ஜ்ஞானஜனீ ரமணாஶிவம் |
ஶோகக்ஷயாரேஶ்வரணாதிதேவஹத்யாஸஹாபதிம் ||
விவிதைர்வர்த்ரதத்ரேந்த்ரஸ்தவேதகாநநநாயகம் |
ஸமித்ஸமிஷிதஸர்வாங்கம் ஸமிஷயாதிவர்ணாஙகம் ||
ஸ்துதிவேதவநம்நாம ஸ்யாநம் பர்ணயதம்ஸஹம் |
யத்ர க்ஷணஜவஸதாம் ஸ்தராம் யஜ்ஞேஶ்வரா ||
தீர்த்தேஷு ஜ்ஞாதம் ஸஹம் ஸேவதாஜவித்யாத்நாம் |
ஸர்வபாபக்ஷயகரா ஸ்வர்கலோகேஷு அபிஜ்யதா: ||
தத்ராதிராஜ அபிதல்ல தத்ஸ்திநர வொத்த |
ஜபாரஜிஹீரயார ஸ்தவதத்ர திஜ்ஞநாஜ ||
வத்ராதிகார ஸமிஜிஸ்யாஜ ஸத்யம் ஸத்யம் ஜஹீவதே |
வேதாரண்யநக்ஷேத்ராணாம் ஸ்நானதாநே ண ஸிஜ்யதி |
விஷ்ணுஜஞவியாதருஜவிர்த்ர ஶ்வஞ கவெபரதா ||

## வேதாரணியேசுவரர்.

கார்தாங்கு வடிவ நெடுமாலு ஞாலங் கண்டவனு
மடிமுடிகள் காணு தேங்கிப்
பேர்தாங்கு குணங்குறி யொன் றின்றே யேனும்
பிறங்கு தொழிலேந் துதவும் பெருமைத் தாகிப்
பார்தாங்கு முலகமுதற் புவனம் யாவும் பதிப்பதற்கோர்
முதலாகிப் படர்ந்திடப் பால்
வார்தாங்கு முலைக்கொடியும் படரும் வேதவனத்துறையுந்
தாணுவையாம் வணங்கல் செய்வாம்.

## யாழைப் பழித்த மொழியம்மை.

வாலமதி நுதல்காட்ட வதனஞ் செந்தாமரை காட்ட
வரைகாட்ட வளர்ந்த கொங்கை
நீலமலர் விழிகாட்ட விமையமென்னு நெடுங்கிரியி
லுதித் தறங்க ணிகழ்த்தி யாவும்
ஞாலமெலாம் பெற்றெடுத்துங் கன்னியாகி நவிலுமறை
நாதனிட நயந்து நிற்கும்
பாலினை யின்னமுதை யருந்தேனை யாழைப் பழித்த
மொழியுமை பாதம் பணிதல் செய்வாம்.

## சுப்பிரமணியக் கடவுள்.

கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப்
பெருங்கடலுங் கலங்கக் கார்வந்
துறங்கு சிகைப் பொருப்பும் சூரப் பொருப்பும்
பிளப்ப மறையுணர்ந் தோராற்று
மறங்குலவு மகத்தழலு மவுண மடவார்
வயிற்றின ழலுமூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள் சேவடிகள்
வணக்கஞ் செய்வாம்.

## தக்ஷிணாமூர்த்தி.

கல்லாலின் புடை யமர்ந்து நான்மறைய
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ளால்வர்க்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக் கப்பாலாய்

யெல்லாமா யல்லவுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்.

## சரஸ்வதியம்மை.

பழுதகன்ற நால்வகைச் சொன்மல ரெடுத்துப்
பத்திபடப் பரப்பித்திக்கு
முழுதகன்று மணந்து சுவை யொழுகி
யணிபெற முக்கண் மூர்த்திதாளிற்
றொழுதகன்ற வன்பொ னூநார் தொடுத்
தலங்கள் சூட்ட வரிச் சுரும்புந் தேனும்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்
தாளடி முடிமேற்கொண்டு வாழ்வாம்.

## திருநந்தி தேவர்.

வந்திறை யடியிற்றாழு வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள்சிந்த வேத்திரப் படையாற்றுக்கி
யந்தியும் பகலுந் தொண்ட ரலகிடுங் குப்பையாக்கும்
நந்தியெம் பெருமான் பாதம் நகைமலர் முடிமேல் வைப்பாம்.

## நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

## சண்டேசுவரர் முதலாம் நாயன்மார்கள்.

தந்தை தாளொடும் பிறவித்தா ளெறிந்து
நிருத்த ரிருதாளைச் சேர்ந்த
மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி
பத்திநெறி வழாது வாய்மெய்
சிந்தைதா னரனடிக்கே செலுத்தினராய்ச்
சிவானுபவச் செல்வராகிப்
பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர்தாள்
பரவிப் பணிதல் செய்வாம்.

6 FEB 1955
MADRAS



சிவமயம்

# வேதாரணியத் தல வரலாறு

## நாரதர் மாந்தாதாவுக்கு ஆதிசேதுவைப் பற்றிக் கூறுதல்.

சூரிய வம்சத்தில் உதித்த, யுவநாசு என்ற அரசனுக்கு, மாந்தாதா என்று, ஒரு புத்திரன் பிறந்தான். அந்த மாந்தாதா என்னும் அரசன், அசுவினி தேவர்களுடைய அனுக்கிரகத்தால், மகா பலத்தை யடைந்து, பூமி முழுவதையும், தன் வசமாக்கிக்கொண்டு, சக்ரவர்த்தியா யிருந்து, நீதிதவறுமல், செங்கோல் செலுத்தி வருங்காலத்தில், ஒருக்கால், நாரதமுனிவர் அவரிடம் வர, நாரதமுனிவரைக் கண்டு அரசன், விதிப்படி வணங்கி மனமகிழ்ந்து பூசித்து, ஓ மகானுபாவா,! எங்கிருந்து வருகிறீர், உம்முடைய முகம் மலர்ந்திருப்பதைப் பார்த்தால், ஏதோ அதிசயத்தைக் கண்டு, திருவுள்ளம் மகிழ்ந்திருக்கிறீரென்று, தோன்றுகின்றது. ஆகையால், அதுவிஷயம் இன்னதென்று, எனக்குத் திருவாய் மலர்ந்தருளுமாறு, பிரார்த்திக்கின்றே னென்று கேட்க, அரசனைப் பார்த்து நாரத முனிவர் சொல்லுகின்றார். அரசனே, நான் ஆதிசேது வில்வேத வனத்தில், ஸ்நானஞ் செய்துகொண்டு வருகின்றேன். அவ்விடத்தில், மாதாவை யணைந்த மகாபாபியான, கோலாகலனுக்குக்கூட சகதீசன் கைலையை அளித்ததை நினைத்து நினைத்து, ஆகா! என்ன க்ஷேத்திர வைபவம் என்று சந்தோஷிக்கின்றேன் என்று சொல்ல, உடனே மாந்தாதா முனிவரை

வணங்கி வேதவனத்தின் மகிமையை மிக்க விருப் போடு வினவுகின்ருர். ஓ முனிசிரேஷ்டரே, வேதா ரணியத்தின் வைபவத்தை, எனக்கு விரிவாகக் கூற வேண்டும், அதற்கு ஆதிசேதுவென்று எப்படிப் பெயர் உண்டாயது என்று, மாந்தாதா வினவ, நார தர் சொல்லுகின்ருர்.

## ஆதிசேது வென்ற பெயர் வந்த வரலாறு

ஓ மாந்தாதாவே, நீர் மகா புத்திமான் ஆனதால், உமக்கு நல்ல விஷயங்களைக் கேட்க, விருப்பமுண் டாயது. ஒரு பிர்ம்மாவானவர், எவ்வளவு காலம் அதி காரஞ் செலுத்தி வருகின்ருரோ, அதன் மத்தியில் நாராயணன், இராக்கதர்களை அழிக்கும்பொருட்டு இராமனைகப் பூமியில் அவதரித்து, லோகங்களைப், பரிபாலித்து வருகின்ருர். அப்படியிருக்க, ஒரு அவ தாரத்தில். சமுத்திரத்தி லணைகட்டி, இலங்கையை அடைந்து இராக்ஷதர்களைக் கொன்றுவிட்டுத் தன் அயோத்தியை நோக்கி வரும்போது, பிர்ம்மஹத்தி தொடர, அதனல் முகம் வாடி உற்சாக மற்றிருக்கும் இராமனை, முனிவர்கள் பார்த்து, இராமா, பிர்ம் மஹத்தி தொடர்ந்து வருகின்றதென்று, மனம் வருந்த வேண்டாம். உன்னல் கட்டப்பெற்ற சேது மூலத்தில், பரமேஸ்வரனைத் தவத்தால் வணங்கினல் பிரம்மஹத்தி விலகிவிடும் என்று சொல்ல. உடனே இராமன், வில்லின் நுனியினல், அணையை நடுவி லுடைத்து, இராக்கதர்கள் இலகுவாய் வராமலிருக் கும்படி செய்துவிட்டு, மகாதவம் பொருந்திய அருபத் தெண்ணுயிரம் முனிவர்களோடுங்கூடத் தவஞ்

செய்ய உரியதான தலம் பார்க்கும்போது. ஜாபாலி முனிவர், இராமா நான் சொல்வதைக் கேள், சத்தியகிரி யென்று தவத்திற்கு அருமையான மலை ஒன்றிருக்கின்றது. அதில் சத்தியவதி என்று ஒரு நதியுண்டாகி, வடக்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்தமலை இப்பொழுது கவயனென்கிற வானரனால், சேது மூலத்தில் பிடுங்கி வைக்கப்பட்டபடியால், நதி சமுத்திரத்தில் சேர்ந்துவிட்டது. அதன் மேல்கரையில் ஈஸ்வரனைக் குறித்துத் தவஞ்செய்தால், உடனே ஈசன் தோன்றுவார் என்று சொல்ல, இராகவன், சத்தியவதிக்கரையில் உக்கிரமாகத் தவஞ்செய்ய, அப்பொழுது காசியென்று வழங்குகின்ற, வாரணாசியி லெழுந்தருளி யிருக்கும் விஸ்வேசன், பங்குனி மாசம் உத்திர நக்ஷத்திரத்தோடுங் கூடிய பௌர்ணமியில், பகல் பதினைந்தாவது நாழிகையில், திவ்விய தேசோமயமான இலிங்க ரூபீயாய், மகா கொடிய பாபங்களைக்கூட நாசஞ்செய்யும் மணிகர்ணிகையோடு கூடத் தோன்றினார். உடனே இராமன், தன் முன்னால் தோன்றி யருளிய மகாலிங்கத்தைக் கண்டு. மகிழ்ந்து தண்டம் போல் விழுந்து நமஸ்கரித்து எழுந்து கை குவித்துப் பலவாறு தோத்திரம் செய்யும்பொழுது, பரமசிவன் லிங்கத்தினின்றும் வெளிப்பட்டு இராகவனை நோக்கி இராமா, லோகத்தைக் காக்கும்பொருட்டு, இராக்ஷதர்களைக் கொன்று வீர லட்சுமியை யடைந்தாய், நீ வருத்தத்தை விட்டுவிடு, அவர்கள் பிர்மகுலத்திலுதித்தவர்க ளானதால், உன்னைப் பிர்ம்மஹத்தி தொடர்ந்தது, அந்தப் பிர்ம்மஹத்தி, என தனுக்

கிரகத்தால், நிவிர்த்தியாகிவிட்டது. உனக்காக நான் மணிகர்ணிகையோடு கூடத் தோன்றினேன். நீ இதில் ஸ்நானஞ் செய்து மேல்கரையி லிருக்கின்ற இந்த சிவலிங்கத்தைப் பூசிக்கக் கடவாய். இந்த மணிகர்ணிகையில், மத்தியானத்தில் ஸ்நானஞ் செய்வது, உத்தமமான பலத்தைக் கொடுக்கும். காசியில் காலையில் ஸ்நானமும், மத்தியானத்தி லிந்த மணிகர்ணிகை-ஸ்நானமும் சமமானது. இதிலிந்த தினத்தில் ஸ்நானம், அதிக விசேடமுள்ளது என்று, ஈசன் சொன்னதைக் கேட்டு இராகவன். பரமசிவனை நோக்கி, ஹே ஜகதீசா? நீர் என்னிடங் கிருபை கூர்ந்து, சகலமான பிராணிகளும் கரையேறும் பொருட்டு, இவ்விடத்திலேயே எழுந்தருளி யிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அப்படியே யாகட்டு மென்று அனுக்கிரகித்து ஈசன் இலிங்கத்தில் மறைந்தருளினர். உடனே இராமன் சகலமான முனிவர்களோடும் வானரர்களோடும் இராக்ஷதர்களோடும் மணிகர்ணிகையில் ஸ்நானஞ் செய்து மகாலிங்கத்தைப் பூஜித்துப் பிர்ம்மஹத்தியினின்றும் விடுபட்டுச் சகலமான பிராணிகளையும் இப்படியே இருந்து காக்கவேண்டுமென்று ஈசனிடம் வரம்பெற்று அயோத்தியை அடைந்தார். மாந்தாதாவே, இந்தத் தலத்தில் ஆதிராமனால் சேதுபந்தனஞ் செய்யப்பட்டதால் இதற்கு ஆதிசேதுவென்று பெயர் ஏற்பட்டது. இந்த இலிங்கத்தில் பிரளய கால்த்தில் வேதங்களும் சாஸ்திரங்களும் புராணங்களும் லயித்திருந்து மறுபடியும் சிருட்டி காலத்தில் வெளியில் தோன்றுகின்றது. இந்த லிங்

கத்திற்கு பிரளயத்திலுங்கூட நாசமில்லை இந்த இலிங்கம், பஞ்சாக்ஷர மயமாயுள்ளது என்று நாரதர் சொல்லி முடித்தார்.

## வேதாரணியம் என்ற பெயர் வந்த வரலாறு

ஓ அரசனே! நான்கு வேதங்களும் புராணங்கள், ஆகமங்கள், ஸ்மிருதிகள், சாஸ்திரங்கள் முதலியவைகளோடு கூடச் சத்தியநதிக் கரையிலிருக்கின்ற ஈஸ்வரனைப் பூசித்து, மகாலிங்கத்திற்கு வடபாகத்தில், ஐஞ்ஞூறு விற்கடையில் வேதாமிருத மென்று ஒரு தீர்த்தத்தையும் உண்டுபண்ணிக் கொண்டு, தவஞ் செய்ய, அப்போது ஈசன் தோன்றி வேதங்களை நோக்கி! வேண்டுவதைக் கேளுங்களென்று சொல்ல, உடனே வேதங்கள், அஞ்சலி பந்தனம் செய்துகொண்டு, ஈசனை நோக்கி, ஹே பிரபோ! ஜகதீசா, பாஷாண்டிகளாலும், விராத்தியர்களாலும் பதிதர்களாலும் அத்தியயனஞ் செய்யப்பட்டு, வீரியமற்றுப் போய்விட்டோம். அப்பேர்ப்பட்ட தோஷத்தை, நிவிருத்தி செய்து, கல்ப்ப காலங்களில் இவ்விடத்திலேயே நாங்கள், விருக்ஷங்களாகவும், கொடிகளாகவும், செடிகளாகவும் முளைத்து, ஒருவருக்குந் தெரியாமல், வசிக்கும்படி, அனுக்கிரகிக்க வேண்டும், இந்த சத்திய நதிக்கு, இதுமுதல், வேதநதியென்று பெயர் உண்டாகவேண்டும். இது அரை யோசனைதூரம் சமுத்திரத்தில் சேர்ந்திருப்பதால் அதுவரை வேத தீர்த்தமென்று சமுத்திரத்திற்குப் பெயர் ஏற்படவேண்டும். இந்த க்ஷேத்திரத்திற்கு வேதாரண்ணியமென்றும், எங்களா

லேற்படுத்திய தீர்த்தத்திற்கு, வேதாம்மிருத மென்றும் பெயர் உண்டாகவேண்டும். மார்கழி மாதம், யதீ பாதம் சூரிய உதயத்தில், நீர் எங்களுக்குத் தெரிசனம் தந்தபடியால், இந்த தினத்தில், வேதாம்மிருதம், வேத தீர்த்தம், கோடி தீர்த்தம், மணிகர்ணிகை முதலானவைகளில் ஸ்நானஞ் செய்தவர்களுக்குச் சாயுச்சியத்தை அளிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, ஈசன், அப்படியே அனுக்கிரகித்து விட்டு மறைந்தருளினர். அது முதலிந்தத் தலத்திற்கு, வேதாரணிய மென்று பெயர் ஏற்பட்டது. என்று மாந்தாதாவுக்கு நாரதர் சொல்லி முடித்தார்.

## வேதாரணியத் தல விசேடம்

### நாரதர் மாந்தாதாவுக்கு வேதாரண்ணியத் தலத்தின் மேன்மை யுரைத்தது

கேளும் மாந்தாதாவே! கங்காத்துவாரம், புஷ்க்கரம், காசி, பிரயாகை, நைமிசவனம், கயை, பதரீகாச்சிரமம், குருக்ஷேத்திரம், கங்கா சங்கமம், சோமநாதம், ஓங்காரம், மகாகாளம், கோகர்ணம், மல்லிகார்ச்சுனம், காளஹத்தி, காஞ்சீபுரம், விருத்தாசலம், அருணசலம், விரிஞ்சிபுரம், சிதம்பரம், காவேரி சங்கமம், திருவெண்காடு, திருவாலங்காடு, சீர்காழி, திருக்கடையூர், மாயூரம், குத்தாலம், கோழுத்தீச்சுரம், வைத்தீஸ்வரம், திருக்கோடிக்காவல், மங்களவம்சம், மத்தியார்ச்சுனம், திருநாகேச்சுரம், கும்பகோணம், திருவலஞ்சுழி, சுவாமிமலை, திருவயாறு, திருப்பூந்துருத்தி, திருப்பழனம், வசிட்டே

சுவரம், திருச்சோற்றுத்துறை, திருவானைக்காவல், திருவாஞ்சியம், திருவாரூர், ராமேஸ்வரம், மதுரை, திருச்சங்குமலை, திருசெந்தூர், கன்னியாகுமாரி, சுசீந்திரம், வில்வவனம், பீமேஸ்வரம், பாரிஜாத வனம், நாகப்பட்டினம், வேதாரண்யம் முதலான தலங்களில் மரணத்தினல் முத்தியுண்டாகும். இவை களில் வேதாரண்யமானது உத்தமத்தில் உத்த மம். மாந்தாதாவே! கேளும். மணிகர்ணிகைக்குத் தெற்கே ஒரு குரோசத்தில், சத்தியகிரியின் கொடு முடியில் இரண்டாவது சங்கரரான அகஸ்திய முனி வர், மகாதவத்தினுலும், சிவபூசையின் பெருமையினு லும், பஞ்சாக்ஷர ஜபத்தின் மகிமையினுலும், சகல ஆபரணங்களோடு கூடத் திவ்விய அலங்காரத்தோடு விளங்குகின்ற அம்பிகையோடு விமானத்திலமர்ந்த பரமசிவனுடைய விவாக (மணவாள)க் கோலத் தைக் கண்குளிரத் தெரிசித்துக் கொண்டிருக்கின்ரு ரென்று சொல்ல,

## அகஸ்தியருக்கு இறைவன் திருமணக்காட்சி கொடுத்த வரலாறு

மாந்தாதா நாரதரைப் பார்த்து, ஓ நாரதரே! பரமேஸ்வரன் இமயமலையிலல்லவோ கல்லியாண தரிசனங்கொடுத்தார். வேதாரண்யத்தில் அகஸ்திய ருக்கு மாத்திரம், தரிசனங்கொடுக்க, என்ன காரணம் என்று கேட்க, நாரதர் சொல்லுகின்ருர், அரசனே! முன்காலத்தில், இமயமலையில், நித்தியகல்யாண மூர்த்தியான ஈஸ்வரனுடைய திருக்கல்யாணத்தைத் தெரிசிக்கவேண்டிச் சனகாதியோகிகளும், குபேராதி யக்ஷர்களும், விரோசனுதி அசுரர்களும், விஷ்ணு முத

லான தேவர்களும், வசிஷ்டர் முதலான ரிஷிகளும், சித்த வித்தியாதர, கருடகந்தர்வர் முதலானவர்களுங் கூட்டமாகச் சேர்ந்தனர். அப்பொழுது இந்தப் பூமியானது, பாரத்திலுல் வடபுறந்தணிந்து தென் புறமுயர்ந்து தோன்றியது. உடனே சகல தேவர் களும், முனிவர்களும் பயந்து, சர்வலோகநாயகனுகிய ஈசனைப் பணிந்து. ஹே சம்போ ஜகதீசா, தயா நிதியே, ரக்ஷியும் ரக்ஷியுமென்று பிரார்த்தித்தனர். அப்போது தேவதேவனுன மகாதேவன். தன் னருகி லிருந்த, அகத்தியரைப் பார்த்து ஹே! அகஸ் தியா! பக்த சிகாமணியே! பார்த்தயா? மகரிஷிகளின் பயத்தை, விந்தியனும் லோகவிரோதம் பண்ணிக் கொண்டு இருக்கின்ருன். ஆகையால், வேகமாகத் தெற்குத் திக்கை யடைந்து. விந்தியனைப் பாதாளத்தி லழுத்தி, வில்வலன் வாதாபிகளையுங் கொன்று, பூமியையும் சமமாகச் செய்யக்கடவாய். உனக்கு, மகாமகிமை பொருந்திய நமது வேதாரண்யத்தில், விவாகதெரிசனங் கொடுக்கின்ருேம் போவென்று உத்திரவளித்தார். உடனே அகஸ்தியர் தண்டம் போல் பணிந்து, ஹே! ஜகதீசா! நான் என்ன பாவம் செய்தேன். இவ்வளவு முனிவர்களும், இந்த மகாவைபவத்தைத் தெரிசிக்க, நான்மாத்திரம், இவ்விடமிருந்து, போகும்படியாய்நேரிட்டதே என்று மனம்வருந்த, ஈசன், அகஸ்தியா! அந்த வேதவனத் தில் இப்படியே தெரிசனங் கொடுக்கின்ருேம். வேதாரணியம், தெக்ஷிணகயிலாயமாகப் போகின் றது, என்று சொல்லியனுப்பினுர். அகஸ்தியமுனி வர், பிரயாணமாகி வரும்பொழுது, விந்தியனை பாதா

ளத்திலழுத்தி வில்வலன் வாதாபிகளையுங் கொன்று, பூமியையும் சமமாகச் செய்துவிட்டு, வேதவனம் வந்து, மணிகர்ணிகை, வேதாம்ருதம், வேததீர்த்தம் தனுஷ்கோடி, முதலான தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, மகாலிங்கத்தை விதிப்படி பூசித்து, ஒரு கூப்பாட்டுக்குத் தெற்கே, பர்ணசாலை கட்டிக் கொண்டு தவம்புரிந்து வந்தார். அவ்விடத்தில், அகஸ்தீஸ்வரர் என்று ஒரு லிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து, பூசித்துவருங்கால், ஈசுவரன் தேவியுடன் கல்யாணக் கோலங்கொண்டு, தேவர்களோடும், முனிவர்களோடும், கணங்களோடுங் கூடத்தோன்றி இரத்தின சிம்மாசனத்தில் பராசத்தியோடுகூடத் தெரிசனங் கொடுத்தார். அகஸ்தியர் மிகுந்த சந்தோஷங்கொண்டு பணிந்து பரவசமடைந்து பலவாருகத் துதித்து, நமஸ்கரித்து எழுந்தார். உடனே ஜகதீசன்! அகஸ்தியரைநோக்கி என்பக்த சிகாமணியே! உனக்கு வேண்டியவரத்தைக் கேள் என்று சொல்ல. அகஸ்தியர் ஹே பிரபோ! என்னிடத்தில் தங்களுக்குப் பரிபூரண கிருபை இருக்குமானுல் இந்த வேதவனத்தி லிப்படியே சகலமான பேர்களுக்கும் அனுக்கிரகம்செய்துகொண்டு இருக்க வேண்டும். எனக்குத் தெரிசனங் கொடுத்த இந்தச் சித்திரை மாதம் ஞாயிற்றுக் கிழமையுடன் கூடிய சுக்கிலபக்ஷம் சப்தமி யன்று பகலில் இந்தத் திருக் கல்யாணக் கோலத்துடன் கூடிய உம்மைத் தரிசனஞ் செய்தவர்களுக்கும், மாசிமகத்தில் தரிசனம் செய்தவர்களுக்கும், போக மோக்ஷங்களைக் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். பரமேஸ்

வரனும் அப்படியே ஆகட்டுமென்று அனுக்கிரகம் செய்து இலிங்கத்திற்குப் பின்பாகத்தில் கல்யாணக் கோலத்துடன் இருந்தருளினர் என்று சொல்ல. மாந்தாதா நாரதரைநோக்கி, விஸ்வாமித்திரர் இங்கு வந்த வரலாறு எவ்விதமென்று கேட்க நாரதர் சொல்லுகின்றூர்.

## விஸ்வாமித்திரர் வேதவனம் வந்த வரலாறு

அரசனே ! கேட்பாய், குச வம்சத்தில் உதித்த விஸ்வாமித்திரனென்னும் அரசன் வேட்டைக்காக வனத்துக்கு வந்தவிடத்தில், வசிஷ்ட முனிவரால் தனக்குச் செய்யப்பட்ட உபசாரங்களைப் பார்த்து ' இது காமதேனுவின் மகிமையினல் என்றறிந்து காமதேனுவை விரும்பிக்கேட்டார். வசிஷ்டர் கொடுக்காததினல், அவரை விரோதித்துக் கடும்போர் புரிந்து அதில் தோல்வியுற்று, க்ஷத்திரிய பலத்தைத் தூஷித்துப், பிரம தேஜஸைக் கொண்டாடி, அதை யடைய விருப்பங்கொண்டு, பல இடங்களில் தவஞ்செய்து, விக்கினத்தை யடைந்தார். முடிவில் இந்த வேதவனம் வந்து, பர்ணசாலை கட்டிக்கொண்டு, மூன்று தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து வேதவனேசனை வணங்கிக்கொண்டு தவம் புரிந்திருந்தார். அதுபோது ஓர் அசரீரிவாக்குண்டாகி, ஓ விஸ்வாமித்திரா! இவ்விடத்தில் கொஞ்சகாலம் தவஞ்செய்து வேதவனேசனைப் பூஜித்தால், உமக்குச் சகலமான சித்திகளும் கைகூடும் என்று சொல்லி, அனுக்கிரகித்துவிட்டு முடிவை யடைந்தது. கௌசிகரும் அப்படியே தவஞ்செய்து வருங்கால் ஒரு சமயம்

மேனகையானவள் வந்து, தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து வேதவனேசனைப் பூஜித்து மறுபடியும் அமராவதிக்குச் செல்லும்பொழுது மிகுந்த அழகையும், தவத்தினல் உண்டான தேஜஸையும் உடைய விஸ்வாமித்திரரைக் கண்டு மயங்கிக் காம விகாரங்கொண்டு அவரருகில் சென்று நின்ருள். உடனே விஸ்வாமித்திரர், அடி பெண்ணே! யான் இப்போது பிர்ம்மசரிய விரதத்தைக் கைக்கொண்டிருக்கிறேன், இது போழ்து, ஸ்திரீகளோடு பேசவுங் கூடாது. நீ சீக்கிரத்தில், இவ்விடத்தை விட்டுச் சென்றுவிடு என்ருர். மேனகை விஸ்வாமித்திரரைப் பார்த்துச் சிரித்து, உமக்கு முனி தர்மம் கொஞ்சங்கூடத் தெரியவில்லை, உம்மைக் கண்டு ஆசை கொண்ட என்னை மறுதளித்தீர் ஆகையால் நீர், கிழத்தன்மையை அடையக்கடவது என்று, கோபத்துடன் சபித்தாள். விஸ்வாமித்திரரும் அப்படியே கிழ வுருக்கொண்டு தாமும் மேனகையைக் கிழத் தன்மையை அடையப் பிரதி சாபங் கொடுக்க அவளும் கிழப்பருவமடைந்தாள். பின்னர் முன் அனுபவத்தால் வேத தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து மறுபடியும் திவ்விய ரூபத்தை அடைந்தாள். அதைக் கண்டு விஸ்வாமித்திரரும் அப்படியே ஸ்நானஞ் செய்து காமன் போன்ற உருவத்தோடு கூடி, ஆச்சரியமடைந்து மேனகையை மோகத்துடன் பார்க்க, இருவரும் கைகலந்து ரமணீயமான இடங்களிற் சென்று காதலுடன் ரமித்துக்கொண்டிருந்தார்கள். அக்காலங்களில் மேனகையானவள், வேதநதியில் மூழ்கி நற்கதியடைந்த பல முனிவர்கள், அரசர்

கள், கோலாகலன் முதலான கொடிய பாபிகளது சரித்திரங்களையும் விஸ்வாமித்திரருக்குச் சொல்லி வந்தாள். பின்னர் வெகு காலம், விஸ்வாமித்திரருடன் ரமித்திருந்து மிக வழகான ஒரு புத்திரியைப் பெற்றுவிட்டு, விஸ்வாமித்திரரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, அமராவதிக்குச் சென்றுவிட்டாள். கௌசிகர் மறுபடியும் மறைக்காட்டை யடைந்து முன்போல் தவஞ் செய்து கொண்டிருந்தார்.

## திலோத்தமை மானுக மாறிய வரலாறு

வேதவனேசனுக்கு ஈசானதிக்கில் வன்னி விருக்ஷ மூலத்தில் பர்ணசாலையில் தவஞ் செய்து கொண்டிருக்கும் விஸ்வாமித்திரருடைய தபோபல வலிமையான தவக்கனல், அமரலோகத்தைத் தபிக்கச் செய்ய, அமரர்கள் மிக வச்சமுற்று, திலோத்தமையை யழைத்து, மறைக்காட்டில் மகாதவஞ்செய்யும் விஸ்வாமித்திரரை வசப்படுத்தென்று, உத்திரவளித்தனர். அவள் உடனே வேதவனம் வந்து, தவஞ் செய்து கொண்டிருக்கின்ற விஸ்வாமித்திரர் அருகில் சென்று, அநேகவித ஆடையாபரண அலங்காரத்தோடும், வீணைகானத்தோடும், உலாவித் திரியும்பொழுது, மணிகர்ணிகைக்குப் புறப்பட்ட விஸ்வாமித்திரர், திலோத்தமையைக் கண்டு, அடிபெண்ணே! யான் தேவர்கள் பதத்தைக் குறித்துத் தவஞ்செய்யவில்லை, வேதியனுகும் விதத்தைத் தேடுகின்றேன், இஃதை அமர வேந்தனிடம் அறிவிக்கக் கடவாய். இனிமே லிவ்விடத்திலுன்னைக் கண்டால், சபித்து விடுவேன், ஓடென்று சொல்லிவிட்டுச் சென்றார். திலோத்தமை, தேவேந்திரன் சாபத்திற்கஞ்சி,

பெண்மா னுருவங்கொண்டு, விஸ்வாமித்திரர் ஆச்சிரமத்தருகில் சஞ்சரிக்கும்பொழுது, வேதவனேசர் தரிசனத்துக்காகப் புறப்பட்ட கௌசிகர், அந்த மானைக்கண்டு, திலோத்தமையென்று நிச்சயித்து, உன்னை நான் போகும்படி சொல்லியும், நீ போகாததால், இப்படியே மானுகக்கடவாய் என்று சபித்தார். பின்னர், மிருக சரீரத்தோடுகூட, வேதவனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த திலோத்தமை, அநேக கஷ்டங்களை யனுபவித்துக் களைப்பினுல், வேதநதியின் ஜலத்தைப் பானஞ்செய்தாள். உடனே சாபம் விலகித் தனது ரூபத்தைப்பெற்று, மூன்று தீர்த்தங்களிலேயும் ஸ்நானம் செய்து வேதவனேசரைத் துதித்தாள், உடனே வேதவனேசர், அனுக்கிரகஞ்செய்ய, வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொண்டு சந்தோஷத்தோடு சுவர்க்கத்தை யடைந்தாள்.

### விஸ்வாமித்திரர் பூசுரரான வரலாறு

மறுபடியும் விஸ்வாமித்திரர், மகத்தான தவத்திலிருக்க, அந்தத் தவக்கனல், மூன்று லோகங்களையும் எரிக்க, உடனே தேவர்கள், பிரமனிடம் முறையிட, பிரமன் வேதவனம் வந்து, விஸ்வாமித்திரரை நோக்கி, கௌசிகர் தவத்தை நிறுத்தும் நீர் பூசுரராய்விட்டீர் என்று புகல, உடனே விஸ்வாமித்திரர், வசிஷ்டர் வாக்கால் உரைக்கச் சொல்லுமென, இரணியகர்ப்பனும் வசிஷ்டரை அழைத்து, நாங்கள், விஸ்வாமித்திரரை வேதியனென்று ஒப்புக்கொண்டு விட்டோம், நீரும் அனுமதிக்க வேண்டுமென்று சொல்ல, வசிஷ்ட முனிவர் அஃதை ஆமோதிக்காம

லிருந்து விட்டார். அப்போது பிதாமகன், வசிஷ்டரே! இவன் வேதவனேசருடைய பக்தன், நீர் அங்கீகரிக்காதவரையில், உமக்குச் சிவாபராதம் ஏற்படுமென்று சொன்னர். வசிஷ்டர் ஒருவாறு பயந்து தானும் ஒத்துக்கொண்டு, கௌசிகரைச் சிஷ்யனுக்கிக்கொண்டு வேதவனத்திலேயே வசித்தார். பிர்ம்மதேவனும் தேவர்களோடு இருப்பிடம் சென்ருர் என்று சூதமுனிவர், நைமிசாரணிய வாசிகளுக்குச் சொன்னர்.

## விடங்கர் வேதவனம் வந்த வரலாறு

பின்னர் விடங்கர், வேதவனத்தில் வந்த வரலாறு, எவ்விதமென்று, முனிவர்கள் வினவ. சூதர் சொல்லுகின்ருர். முன்காலத்தில், தேவர்கள், அசுரர்களால் இம்சைப்பட்டு, விஷ்ணுவைச் சரணடைந்து விஷ்ணுவி னுத்திரவினல், அயோத்தியாதிபதியான முசுகுந்தச் சக்ரவர்த்தியை யடைந்து, சத்துருக்களை வென்று தரும்படி யாசித்தார்கள். உடனே முசுகுந்தன் புறப்பட்டு, யுத்த சன்னத்தனுகி, நான்கு வகைச் சேனைகளோடும், தானவர்களிருப்பிடம் வந்து, கடும்போர் புரிந்து, அசுரர்களை நாசஞ் செய்து வெற்றிச் சங்கம் முழக்க, தேவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு, முசுகுந்தனை ஆலிங்கனஞ் செய்து, அமராவதியை அலங்கரித்துப் பட்டினப் பிரவேசம் செய்வித்துச், சுதர்மை என்னும் சபையில் இரத்தின சிம்மாசனத்தி லிருத்தி, அளவு கடந்த மரியாதைகள் செய்தனர். பின்பு அமரர் கோன், தனது அரண்மனையி லழைத்து, மிக்க உபகாரங்

களைச்செய்து, அநேக விசித்திரங்களைக் காண்பித்துக்கொண்டு கடைசியாகப், பலவிதப் புஷ்ப விருக்ஷங்கள் நிறைந்த நந்தவனத்தின் நடுவில் விளங்குகின்ற, தேவாலயததைத் திறந்து காண்பித்தான். அப்பொழுது முசுகுந்தன். ஆலயத்தில் ரத்ந பீடத்திலமர்ந்திரா நின்ற திவ்ய தேஜோமயமான சோமாஸ்கந்த மூர்த்தியைக் கண்டு தெரிசித்துத் தண்டாகாரமாய் விழுந்து நமஸ்கரித்துப், பார்த்துப் பார்த்துப் பக்தியால் பரவசமாகி, மெய்சிலிர்த்து, உடல் பூரித்து, இந்திரனிடம் யாசிக்க. கொடுக்கச் சம்மதமில்லாததால், இந்திரன், நாளை ஆகட்டுமென்று சொல்லிவிட்டு விஸ்வகர்மாவை யழைத்து, அதுபோல் ஒருவிடங்கரை உண்டுபண்ணிக்காண்பிவிக்க, முசுகுந்தனுக்கு முன்போல் மனமுருகிப்புளகாங்கிதமடையாதபடியால், இது வேறு, முன்னிருந்த மூர்த்தியைக் கொடுவென்று கேட்க. இந்திரனும் மாறி மாறி, ஆறுவிடங்கர்வரை உண்டுபண்ணிக் கொடுக்க, முசுகுந்தன் மனம் ஒப்புக் கொள்ளாததால், எல்லா மூர்த்தியையுங் கொடுத்து, திருப்தி செய்தனுப்பினன்.

## முசுகுந்தர் விடங்கரை வேதவனத்தில் பிரதிட்டை செய்த வரலாறு

முசுகுந்தச் சக்கரவர்த்தியும், அயோத்தியையடைந்து, சில காலஞ்சென்ற பின்னர் விடங்கர்களைப் பிரதிஷ்டை செய்யக் கருதி, புண்ணியத்தலங்களைப் புராண வாயிலாக வறிந்து திருவாரூரில் முதல் விடங்கரையும், இரண்டாவது விடங்கரை வேதவனத்திலும், மூன்ருவது விடங்கரை நாகப்பட்டினத்திலும், மற்றவைகளை, இதுபோன்ற புண்ணியத்

தலங்களிலும், பிரதிஷ்டை செய்து, வேதவன வைபவத்தால், அங்கமர்ந்துள்ள விடங்கரை, விசேஷமாய்த் தெரிசித்துக்கொண்டு வந்தான். இந்திரனுமப்படியே தெரிசித்து வந்தான். ஈசனும், வேதவனத்திலுள்ள மூர்த்தியினிடம், ஸ்தல வைபவத்தால், அதிகப்பிரீதியுடன் சான்னித்தியஞ் செய்துகொண்டு வருகின்றார். இதுதான் வேதவனத்தில் விடங்கர்வந்த காரணம். இந்த விடங்கரைத் தெரிசித்தவர்கள், சாயுச்சியத்தை அடைவார்களென்று சூதர் சொல்லி முடித்தார்.

## எலி மகாபலிச் சக்கரவர்த்தியான வரலாறு

எலியானது, வேதவனேசர் அனுக்கிரகத்தால், மகாபலிச் சக்ரவர்த்தியானது எவ்விதமென்று கேட்க, முனிவர்களே, ஒருசமயம் ஆலயத்தில், அர்த்தயாமப் பூஜையை முடித்துவிட்டுப், பூஜகர்கள் கதவுகளைத் தாளிட்டு, வீட்டிற்குச் சென்ற பின்னர். வேதவனேசன் சந்நிதியில், எரிந்துகொண்டிருந்த நெய்த் தீபம், அணையும்படியா யிருக்கும்பொழுது, ஈசன் தேவியை நோக்கி இப்பொழுது, இந்தத் தீபத்தைத் தூண்டினவன், மூன்று லோகங்கட்கும், அதிபதியாவான் என்று சொல்ல. தற்செயலாக, ஒரு எலி ஓடிவந்து, நெய்யைக் குடிக்க, அதன் மூக்கால் திரியை இழுக்கவும், திரி மிகவும் பிரகாசமாய் எரிய ஆரம்பித்தது அப்பொழுது தேவி நகைத்து, ஈசா! தாம் சொன்னபடி செய்யுமென்று சொல்ல, வேதவனேசரனுக்கிரகத்தால், எலியானது, பூர்வ ஞானத்துடன் மகாபலி என்னும் பெயரைப் பெற்று

விரோசனனுக்குப் புத்திரனுகப் பிறந்து மூன்று லோகங்களுக்கும் அதிபதியானுன். ஆதலால் வேதவனேசன் சந்நிதியில் தீபமேற்றினவர்கள் மகிமையை யாரறிவார் என்று சொன்னுர்.....

## இராமனுக்கு வீரகத்தி நீங்கிய வரலாறு

தசரத ராமனுக்கு, வீரகத்தி, எவ்வாறு நீங்கியது என்று முனிவர்கள் கேட்க, சூதர் சொல்லுகின்றுர். முனிவர்களே, இராமன் இலங்கை சென்று, இராவணனைக் கொன்று, விபீஷணனுக்கு முடிசூட்டி வைத்துத், தேவியை மீட்டுக்கொண்டு, பிரம்ம ஹத்தியின் நிவிர்த்தியின் பொருட்டுச், சேதுமத்தியில், ஒரு இலிங்கத்தைப், பிரதிஷ்டை செய்துவிட்டு, வானரசேனையுடன், விமானராய்ப் புறப்படுந் தருணத்தில், பனைபோலக் கறுத்துயர்ந்த ஒரு ஸ்திரீயைக் கண்டு, ராகவன், நீ யாரென்று கேட்க, அந்த ஸ்திரீ, நான் வீரகத்தி, உம்முடன் கூடவே வருவேனென்று சொன்னுள். ராகவன் மனம்வருந்தி, மறுபடியும் ஒரு இலிங்கத்தைப், பிரதிஷ்டைசெய்ய ஆலோசிக்கும்பொழுது. இராமா, இந்தவிடத்தில் லிங்கப் பிரதிட்டை செய்ததினுல் வீரகத்தி விலகாது, பரதனும் அக்கினியை வளர்த்துக்கொண்டு சொன்ன சமயத்தில், ராமன் வராததால், உயிரை விடுவேனென்று, துணிவுட னிருக்கின்றுன். ஆகையால் அயோத்தி சென்று, முடிசூட்டிக்கொண்டு, பிறகு வேதவனம் வந்து, சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யக் கடவாய். அவ்விடத்தில், வீரகத்தி விலகிவிடும், வேதவனேசன் உமக்குச் சந்ததியைக்

கொடுப்பார். இது சிவாக்ஞை, நான் ஈசனாலனுப்பப் பட்ட பிருங்கிரிடியென்று ஓர் அசரீரிவாக்கு சொல்லி விட்டு முடிவை யடைந்தது. உடனே ராகவன், அயோத்தியை யடைந்து, பரதனை ஆதரித்துப் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு இராச்சிய பரிபாலனஞ் செய்துவருங்கால், ஒருநாளிரவு, முன்கண்ட ஸ்திரியைக் கண்டு பயந்து பஞ்சாக்ஷரத்தைச் செபித்துக்கொண்டிருந்து, மறுநாட்காலை நித்திய கன்மங்களைச் செய்துவிட்டு, வசிஷ்டரைக் கண்டு வணங்கிச் சகல விஷயங்களையுந் தெரிவித்தார். வசிஷ்டர், ராகவனை நோக்கி, ராமா! வேதாரணியம், சகல பாபங்களையும் நிவிர்த்திசெய்து புக்தி முக்திகளைக் கொடுக்கும் மகா புண்ணியத்தலம், ஆகையால் நீ சொன்னபடி செய்வது உத்தமமென்று சொல்ல, உடனே, பரதனை அயோத்தியில் வைத்து விட்டு இராமன், வசிஷ்டர், சத்துருக்கனர், ஜானகி முதலானவர்களுடன் வேதவனம்வந்து சேர்ந்தான் ராகவனைத் தொடர்ந்துவந்த வீரகத்தியானது மேகம் போலக் கர்ஜிக்க, உடனே அந்தச் சப்தத்தைக் கேட்டு, மேல்புறத்தில் கிழக்குமுகமாக விருந்த விக்கினேசுவரர், மேற்குமுக நோக்கி, ராமனைத் தொடர்ந்து வரும் வீரகத்தியைப் பார்த்து ஹுங்காரஞ் செய்ய, வீரஹத்தி பயந்து, ஸ்தம்பம்போல் நின்றுவிட்டது. அதைப் பார்த்து ராகவன் மனமகிழ்ந்து, விக்கினேசுவரரைத் துதித்து இன்றுமுதல் உமக்கு வீரக்த்தி விநாயகரென்று திருநாமம் விளங்க வேண்டுமென்று பிரார்த்தித்து வேண்டிய வரங்களையும் பெற்றுக்கொண்டு, மணிகர்ணிகை, வேதாம்

ருகம், வேதநதி, முதலான தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, சிரார்த்தம், க்ஷேத்திர பிண்டம், முதலானது கொடுத்து வேதவனேசனையும், வீணாவாத விதூஷணியையும், பூஜித்துத் துதித்துவிட்டு, வேதவனேச லிங்கத்திற்குத் தென்பக்கத்தில் இராமநாதரென்றொரு இலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து, சகல பாபங்களினின்றும் விடுபட்டு, ராமசசந்திரபுரமென்றொரு கிராமத்தையும் நிர்மாணஞ் செய்து மறையோர்கட்குத் தானஞ் செய்துவிட்டுத் தனது நகரஞ் சென்று, ராச்சிய பரிபாலனம் செய்து கொண்டிருந்தாரென்று சூதர் சொல்லி முடித்தார்.

## சமீ விருக்ஷமுண்டான வரலாறு

இவ்விடத்தில், சமீவிருக்ஷமானது, எப்பொழுது என்ன காரணத்தினால் உண்டாயிற்றென்று வினவ, நாரதர் சொல்லுகின்றார். ஓ மாந்தாதாவே. ஈசான்னியகோணத்தில், மகா கைய்லாயமென்று வெள்ளி மயமாய் அநேகம் கொடு முடிகளோடும்; உபபர்வதங்களோடும் கூடின, வொருபர்வத மிருக்கின்றது. அது பரமசிவனுக்குப் பிரீதியான இருப்பிடம், அதன் உபபர்வதங்களில், சத்தியகிரி யென்றொரு பர்வதமிருந்தது. அதில் காசிபர், புத்திரனுக்காகத் தவஞ் செய்தார். உடனே பரமசிவன் பிரசன்னராகிப் புத்திர சம்பத்தை யளித்துவிட்டு, நான் உன் தவத்திற் கிரங்கி, அதி சீக்கிரத்தில் தோன்றிய காரண மென்னவெனில். இந்தமலையில் பார்வதியானவள், பாலனை வைத்துக்கொண்டு, லாலனை செய்து கொண்டிருந்தாள், அப்பொழுது வெய்யிலி

ஞல் வாடி வருந்தும் தேவியின் திருமேனியின் சிரம பரிகாரத்திற்காக, இதோ முன்னே நிற்கும் வன்னி மரமாக முளைத்து, நிழல் கொடுத்தேன். தேவியும், இளைப்பாறிவிட்டு, வன்னியை நானென்றறிந்து, நமஸ்கரித்து, ஹேசம்போ, சங்கரா, என்பேரில் தயவுசெய்து, இப்படியே யிருந்தது, இதனடியில் வசித்து நிழலைச் சேவித்தவர்களுக்குச் சகலாபீஷ் டங்களையும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி, நானுமதுமுதல் இப்படியே வன்னி விருக்ஷமாக விருக்கின்றேன். இதனடியில் நீர்தவஞ் செய்தபடியால், சீக்கிரத்தில் பிரசன்னமானேன் என்று சொல்லிவிட்டு ஈசன் மறைந்தார். பின்னர் ஒருசமயம், கவயன் என்கிற வானரன், அதி விஸ் தாரமாயும், உயர்ந்ததாயு மிருக்கின்ற சத்தியகிரி யைக் கொண்டுவந்து, நளன் கையிற்கொடுக்க நளன் வாங்கி, அதைச் சேது மூலத்தில் வைத்தான். மலை, பூமிக்குச் சமானமாய், கீழே யிருந்துவிட்டது. வன்னி விருக்ஷம், அப்படியே யிருக்கின்றது. இதுதான் சமீவிருக்ஷத்தின் வரலாறு என்று சொல்லி முடித்தார்.

## வன்னி விருக்ஷத்தின் விசேடம்

இந்த வன்னி மரத்தினடியில், ஆதி ராமனுக்கு பிர்ம்மஹத்தி நீங்கியது. விஸ்வாமித்திரர், பிராம்ம ணத்தன்மையை யடைந்தார், திரிசங்கு சுவர்க்கத்தை யடைந்தார், சனகாதியான யோகிகளும், யாக்கிய வல்கியர் முதலான ரிஷிகளும், பிர்ம்ம ஞானத்தை யடைந்தார்கள். இந்த வன்னி விருக்ஷத்தின் மூலத்

தில் செய்யப்பட்ட ஜபமும், ஹோமமும், தானமும், தவமும் அளவற்ற பலனை அளிக்குமென்று சூதர் சொல்லி முடித்தார்.

## திருக்கதவு திறக்க அடைக்கச்செய்த வரலாறு

பின்னர், சமயாசாரியர் நால்வர்கள் காலத்துத் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும், அநேகம் திருத்தலங்களை வணங்கித் திருப்பதிகங்கள் பாடிக் கொண்டு திருவீழிமிழலையில் தங்கியிருந்து, பின்னரும், சிவஸ்தலங்களை வணங்கும் பொருட்டு, திருவீழி மிழலையினின்றும் புறப்பட்டுத் திருவாஞ்சியம் முதலான தலங்களையும் தெரிசித்துக்கொண்டு, திருமறைக் காட்டெல்லையை அடைந்தார்கள். பின்னர், மகா மேன்மை வாய்ந்த வேதவனேசர் ஆலயத்துட் புகுந்து வலம்வந்து சுவாமி சந்நிதியில் நின்று திருக் கதவம் திருக்காப்பிட்டிருத்தலை வினவ, அங்குள்ளார் நான்கு வேதங்களும் பூஜித்துவந்து வரம்பெற்றுப் பின்னர் திருக்கதவைத் திருக்காப்பிட்டுச் சென்றதாகவும், அந்நாள்முதல் இந்நாள்வரை அவ்விதமே திருக்காப்பிட்டிருத்தலின் பக்கத்தில், வேறோர் வாயில்வைத்துக் கொண்டு பூசை முதலியன நடந்து வருவதாகவும், திருக்காப்பு நீக்குந் தன்மைவாய்ந்த, சிவஞானச் செல்வர், இது காறுமிங்கு அணுகாததால், திருக்கதவு காப்பிட்டவாறே யிருக்கின்றது என்றுரைக்க. அதனைக்கேட்ட திருஞான சம்பந்தர், அப்பரே! மிக்க பெருமைவாய்ந்த நான்கு வேதங்களும் பூஜித்து வழிபட்ட, அந்தத் தேவதேவனாகிய வேதவனேசனை, நேரே, இவ்விதமும் உட்புகுந்து நாமிரு

வரும், தெரிசிக்க இக்கதவு திருக்காப்பு நீங்குமாறு திருப்பதிகம் பாடி யருளவேண்டுமென்று சொல்ல, அதைகேட்ட திருநாவுக்கரசர், மிகுந்த ஆராமை யோடும், பண்ணினேர்மொழி யென்று திருப்பாசுரம் பாடியருளிப் பதிகத்திலுள்ள பத்து பாசுரமும் பாடி முடித்தும், திருக்காப்பு நீக்கக் காலந் தாழ்க்கப் பின்னர், மிக மனம்வருந்தி, எண்ணீர் இரக்கமொன் றில்லீர் எனறு திருக்கடைக் காப்பிலமைத்துப் பாடி இறைஞ்சுதலும், உடனே திருக்காப்பு நீங்கிக் கத வுந் திறக்கப்பட்டதும். ஞானசம்பந்தரும், அப்பரும் உட்சென்று வேதவனேசரையும் மணவாள நாதரை யும் நமஸ்கரித்து வணங்கி ஆனந்த வெள்ளத்து மூழ்கித் திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு எல்லா மூர்த்திகளையும் வழிப்பட்டுக்கொண்டு வெளியில் வந்து, சம்பந்தரை அப்பர் பார்த்துச் சம்பந்தரே? வேதவனேசர் திருவருளால் எப்பொழுதும், இந்தக் கதவு திறக்கவும் அடைக்கவும் இருக்குமாறு தாம், அடைக்கும்படி பாடியருளவேண்டுமென்று விண் ணப்பிக்க, உடனே திருஞானசம்பந்தர், சதுரம் மறை என்று திருப்பதிகம் எடுத்துப் பாடியருள முதற்பாட்டு முடிவில் கதவு திருக்காப்பிட்டது. அது கண்ட இருவரும் சந்தோஷமெய்தி மறைக்காட் டீசர் திருவருளை எண்ணி எண்ணி மனமுருகி அப் பதிகம் நிரம்பச் சம்பந்தர் பாடி முடித்து வணங்கிக் கொண்டு வரும்பொழுது, அண்மையில் வந்துகொண் டிருந்த அடியார்களனைவரும், இச்செயலைக் கண்டு அதிசயித்து மனமுருகிக் கண்ணீர் பொழிய உடல் புளகாங்கித மெய்தி இருவர் திருவடிகளையும் வணங்கி

ஞர்கள். பின்னர், அப்பரும், சம்பந்தரும் தங்கள் தங்கள் அடியார்குழுக்களோடு மடங்களில் அமர்ந் திருந்தார்கள்.

## கோயில் வரலாறு

### இட அமைப்பு

இக்கோயில் தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி தாலுகாவில் வேதாரணியமென்னும் திவ்விய க்ஷேத்திரம் உள்ளது. மாயவரம் கோடிக்கரையென்னும் ஆதிசேதுவின் இருப்புப்பாதையில் (சென்னையிலிருந்து 237-வது மைல்) வேதாரணியம் இருப்புப் பாதை நிலை (ரெயில்வே ஸ்டேஷன்) யத்தி விருந்து இரண்டு பர்லாங்கு தூரத்தி லிருக்கின்றது.

### கோயில்

கோயில் கிழக்கு முகமாய் ஊர்மட்டத்திற்குச் சற்று பள்ளத்திலிருக்கின்றது. கோயிலுக்குத் தென் கிழக்கில் சுமார் ஒரு ஏக்கர் பரப்புள்ள மணிகர் ணிகை அமைந்திருக்கின்றது. அதன் மேல்பாலும் கீழ்பாலும், செங்கற்களால் ஒட்டப்பெற்ற அழகிய மண்டபமும் விளங்குகின்றது. கோயில் நான்குபக்க மும், பெரிய கருங்கற்றிருமதிலோடு கூடிய ராஜ கோபுரம் இரண்டு மேல்பக்கமும் கீழ்பக்கமும் உள் ளன. கோயிலுக்கு இப்பொழுது இரண்டு பிரகா ரங்கள்தான் பூரணமா யிருக்கின்றது. தேரோடும் நான்கு வீதிகளோடு, சில ராஜாக்களால் உண்டாக்கப் பட்ட அநேக வீதிகளும், நான்கு பக்கமும் அமைந் துள்ளது. கோவிலுக்கு வடபக்கமாக, அம்மையார்

ஆலயம் அமைந்திருக்கின்றது, சுவாமியின் பெயர். மறைக்காட்டீசர். (வேதாரணியேசுவரர்) நான்கு வேதங்களும் பூஜித்து வழிபட்டமையால், மறைக் காட்டீசரென்று பெயர் உண்டாயது. அம்மையா ரின் பெயர், யாழைப் பழித்த மொழியம்மை. (வீணா வாத விதூஷணி) என்றும், வேதநாயகி யென்றும் பெயர். ஸ்தலவிருக்ஷம், வனனி, புன்னை.

## சுற்றுக் கோயில் உட்கோயில் முதலியன

பெரிய பிரகாரத்திற்குள், சுவாமி சந்நிதியில்' தென் கிழக்கில், துண்டி விநாயகர், காலபைரவர்' சப்த கன்னிகை, விஸ்வநாதர். விசாலாக்ஷி, சேது மாதவர் எழுந்தருளி யிருக்கும் ஆலயமும் இருக்கின் றது. நேர் சந்நிதியில் சேது பதிமண்டபமும் அமைந் திருக்கின்றன. அதன் மேல்பால், மூலாதாரக் கண பதி எழுந்தருளியிருக்கும் விமானக் கோயிலும், பலி பீடம், நந்தி மண்டபம், ராஜ நாராயண மண்டப மென்னும் வாத்திய மண்டபமும், அதன் மேல்பால் ஸ்தம்ப மண்டபமும், இதன் தென்பால், சித்தி விநா யகர், பார்வதி, சித்தேஸ்வரர், விஸ்வாமித்திரர், தசரதப் பிரதிஷ்டையாகிய நாகரும் கூடிய ஸ்தல விருக்ஷமான ஜீவித வன்னிமரமும் அமைந்த மண் டபமும், தென்கிழக்கில், மாதாந்திரப் படிக்கட்ட ளைச் சாமான்கள் வைக்கின்ற உக்கிராணமும், திரு வாபரண அறையும், தெற்கில் ஊருணியாயுள்ள விஸ்வாமித்திர கூபமும், இலிங்கமும் இருக்கின்றன. இதன் தென்பால், திருமடைப்பள்ளியும், இதன் மேல்பால், நந்தவனமும், கோவிலுக்குத் தென் மேற்

கில், ஆன்மார்த்தப் பிரதிஷ்டை யென்னும் (பிர்மா அகஸ்தியர், விஸ்வாமித்திரர், மூவர்களால் பூஜிக்கப் பட்ட) மூன்று விமானக் கோயிலும், மேற்கு ராஜ கோபுரத்துக்குக் கீழ்பால், மேற்கு முகமாக ஸ்ரீ ராம வீரகத்தி விமோசகர் ஆலயமும், சந்நிதியில் முப் பத்தி மண்டபமும், துவஜஸ்தம்பமும், இராமரை விட்டு விலக்கிய வீரகத்தி பீடமும் இருக்கின்றன. வீரகத்தி விநாயகருக்கு வடபால், மேலைக்குமார ரென்னும் சுப்பிரமண்யர். இருபாலும் வள்ளியம்மை தெய்வயானை அம்மையாரோடு எழுந்தருளி யிருக்கும் ஆலயமும், அதன் சந்நிதியில், ஊருணியாகிய திரு மஞ்சனக் கிணறு இரண்டும், உள்ளன. அதன் வட பால் கிழக்கு முகமாக உட்பிரகார மமைந்த கருங் கற்றிருமதில் நான்கு புரமுமுள்ள கோபுர மமைந்த தரிசன மண்டபமும், மேல்பால் மகா மண்டபமும் அர்த்த மண்டபமும், அதன் மேல்பால், யாழைப் பழித்த மொழியமமையார் எழுந்தருளி யிருக்கும், கர்ப்பக் கிருகம் விமானக் கோயிலும், உட்பிரகாரத் தில், தென் கிழக்கில் கொலு மண்டபமும், தென் மேற்கில், விமான மமைந்த அச்சந் தீர்த்த விநாய கர் ஆலயமும், வட மேற்கில், விமானமுள்ள வள்ளி தேவயானை அம்மன் சமேதராய் எழுந்தருளி யிருக்கும் சுப்பிரமணியர் ஆலயமும், வடபால் சண்டிகேஸ்வரி ஆலயமும், ஈசான திக்கில், உற்சவ மூர்த்தியாகிய வேதநாயகி அம்மன் ஆலயமும், இருக்கின்றன. கோபுரத்திற்குக் கீழ்பால், நந்தி, பலி பீடம், துவஜஸ்தம்பமும் உள்ளன. வடபால் அமிர்த (சுதா) கூபம், என்னும் தீர்த்தமும், அதன் கீழ்

பால், உத்தாலகர், நாசிகேது, இவர்கள் பிர்ம்மக் ஞானம் பெற்றதும், ஸ்தல விருக்ஷமான புன்னை மரமும் அமைந்த மேடையும், இதன் தென்பால் சந்நிதியில் முப்பத்தியமைந்த உற்சவ மண்டபமான பிரசங்க மண்டபமும் இருக்கின்றன. இதன் வட கிழக்கில் ஆன்மார்த்தலிங்கப் பிரதிஷ்டையாகிய காசி விஸ்வநாதர் எழுந்தருளி யிருக்கும் விமானக் கோயிலும், அம்மையார் சந்நிதியும், நேர்கிழக்கில், பதினாறுகால் மண்டபமும், அதன் வடபால், வாகனப் பத்தி மண்டபமும். வடகிழக்கில், செங்கற்களால் ஒட்டப்பெற்ற முப்பத்தி வசந்த மண்டபமும், அதன் தென் கிழக்கில், யாகசாலை விமான மண்டபமும், அதன் தெற்கில் மகா சாஸ்தா எழுந்தருளி யிருக்கும் ஆலயமும், மேற்கில் நாலுகால் ஊஞ்சல் மண்டபமும் இருக்கின்றன.

## உட்கோயில்

சுவாமி சந்நிதியின் உட்பிரகாரத்தில், கருங்கற் றிருமதிலோடமைந்த கோபுரமும், அதிகாரநந்தியும், கர்ப்பக்கிருகாலயத்திற்குள், சுயம்பு மூர்த்தியாகிய வேதாரணியேசுவர ரென்னும் சத்தியகிரீஸ்வரரும், அகஸ்தியமுனிவருக்குத் திருமணக்கோலங் காட்டி யருளிய மணவாளநாதரும், அர்த்த மண்டபத்தின் ஈசான, திக்கில் போகசததி யென்னும் பராசத்தியும், திரோதான சத்தியைக் குறிக்கும் திரைப்படமும், மகாமண்டபமும், தரிசன மண்டபமும், ஸ்நான மண்டபமும், நர்த்தமண்டபமும், கீதமண்டபமும் திருநாவுக்கரசு நாயனர், திருஞான சம்பந்தமூர்த்தி

நாயனார்களால் திருக்கதவு திறக்கவும், அடைக்கவும் பாடியருளிய திருவாயிலும், தென்பால், அப்பர் சம்பந்தரும், வடபால் மகாமாரி, பிடாரி, முதலான பல உற்சவமூர்த்திகள் எழுந்தருளி யிருக்கும் மண்டபமும், அமைந்துள்ளது. சுவாமிக்குத் தென்கீழ்பால் ஸ்ரீ புவனிவிடங்கத் தியாகராஜப்பெருமான் திவ்விய அலங்காரத்தோடுகூட எழுந்தருளி யிருக்கும் ஆலயமும், சந்நிதியின்கீழ் பத்தி மண்டபத்தில், ஆலால சுந்தரமூர்த்தி சுவாமிகளும், அதன் தெற்கில் கல்யாணசுந்தரரும், அர்த்தநாரீஸ்வரரும், பிக்ஷாடனரும் எழுந்தருளி யிருக்கின்றார்கள். தென்பாகத்தில் வடக்கு முகமாக, ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமியும், அதன் மேல்பால், சிலா விக்கிரகமாகிய மூலமூர்த்திகள் எழுபத்து மூவரும், ஷை உற்சவமூர்த்திகள், 73-வரும் உள்ளன. சுவாமிக்குத் தென்பால், தசரதராமரால் பிரதிஷ்டை செய்து பூஜித்த இலிங்கம் எழுந்தருளி யிருக்கும் விமானக் கோயிலும், ஷை சந்நிதியின் வடபால், அகோரவீரபத்திரர் தக்கன், நந்தி, பலிபீடமு மிருந்கின்றன. தென்மேற்கில், வேதவன விநாயகர் ஆலயமும், மேற்கில் முத்துக்கதுவீசர் மூலலிங்கமும், ஆன்மார்த்த விநாயகரும், வடபால், உற்சவமூர்த்தியாகிய, காக்ஷி கொடுத்த நாயனாரும், எழுந்தருளி யிருக்கின்றார்கள். சுவாமிக்கு மேல்பால் திருமாலைகட்டும் மண்டபமும் உள்ளது. கர்ப்பக் கிருகத்திற்குத் தெற்கில் ஸ்ரீ தெக்ஷிணாமூர்த்தி எழுந்தருளி யிருக்கின்றார். மாலைகட்டும் மண்டபத்தின் வடபால் பாண்டவர்கள் பூஜித்த ஐந்து லிங்கங்களும் உள்ளன. அதன் வட

பால், வள்ளியம்மை தெய்வானை யம்மையாரோடு கூடிய சண்முகநாதர், எழுந்தருளி யிருக்கும் ஆலயமும் உள்ளன. அதன் வடபால் மகாலக்ஷுமியும் அதன் வடக்கு, சுதவேலை செய்யப்பட்ட கெஜலக்ஷுமியும், கீழ்பால் ஜுரதேவரும், சனீஸ்வர பகவானும், எழுந்தருளி யிருக்கின்றார்கள். அதன் கீழ்பால், யோக சரஸ்வதியும், அதன் கீழ்பால், திருமுறை ஆலயமும், அதன் கிழக்கில் நாகேசர், அன்னபூரணி யம்மை ஆலயமும் அமைந்துள்ளது. சுவாமிக்கு வடபால், அர்த்தத் திரிகோடி தீர்த்த கூபமும், கிழக்கில், சண்டிகேசுவரர் ஆலயமும் உளளன. அன்னபூரணிக்குக் கீழ்பால் உள்ளாசார மடியுலர்த்தும் மண்டபமும், அதன் கிழக்கில், உலகப் பிரசித்தியாகிய ஸ்ரீ துர்க்காம்பிகா எழுந்தருளி யிருக்கும் ஆலயமும் இருக்கின்றது. இதன் கீழ்பால் சந்திர சேகர ராலயமும் அமைந்துள்ளது. இதன் கீழ்பால், நகுலேசர் ஆலயமும், அதன் கீழ்பால், தேவபக்த சபாநாத ஸ்ரீ நடராஜமூர்த்தி எழுந்தருளி யிருக்கும் சபையும், அதன் கீழ்பால் தியாக ராஜப் பெருமானது சத்தியாகிய நீலோற்பலாம்பாள் எழுந்தருளி யிருக்கும் ஆலயமும் இருக்கின்றன. கீழ்பால் மேற்கு முகமாக, சிலா விக்கிரகமான நவக்கிரகங்களும் எழுந்தருளி யிருக்கின்றன. இதன் தென்பால், திருப்பள்ளியறையும், இதன் தெற்கில் சூரியன், சந்திரன், பைரவரும், பிருங்கிரிஷியும், எழுந்தருளி யிருக்கின்றார்கள். கோபுரத்திற்கு வெளியில் சந்நிதியின் வடபால், செட்டியார் மண்டப மென்கிற சபாமண்டபமும், இராஜகோபுரத்திற்கு வெளியில் இருபுறமும்,

சிலா விக்கிரகமாகிய துவாரபாலகர் இருவர் எழுந்தருளி யிருக்கின்றார்கள். சந்நிதியில் நடைகாவண வீதியும். நேர்கிழக்கு பர்லாங்கில், ஸ்வாமி வேதநதித் தீர்த்தத்திற்குச் சென்று வருங்கால் பானக்க பூஜா மண்டபமாகிய நாலுகால் மண்டபமும் உள்ளன.

## சிற்பச் சிறப்புகள்

கோவில் முற்காலத்தில் கருங்கற்களால் நன்கு வேலைபாடுள்ளதாக அழகிய திருப்பணி செய்யப்பட்டது. ராஜநாராயண மண்டபம். பதினாறுகால் மண்டபம், வன்னியடி மண்டபம், செட்டியார் மண்டபம், புராண மண்டபம் முதலியவை கருங்கற்களால் நன்கு திருப்பணி செய்யப்பட் டிருக்கின்றன. வசந்த மண்டபம், சேதுபதி மண்டபம் இரண்டும், செங்கற்களால் முப்பத்தியாக நன்கு ஒட்டப்பட்டிருக்கின்றது. செட்டியார் மண்டபத்தில், வீரபத்திரர் விக்கிரகம் இரண்டும், காளியம்மன் விக்கிரகம் இரண்டும், அழகான சிற்பத்திறமை வாய்ந்ததாய் அமைந்துள்ளது. இன்னும், கொடுங்கைகளும், போதிகைகளும் அதிலமைந்துள்ள யாளிகள், சிங்கங்கள். கருங்கற்சங்கிலிகள் யாவும் சிற்பத்திறமை வாய்ந்தவை. சந்நிதியின் முதற்பிரகாரத்திலுள்ள மண்டபத்தில் இருபத்தேழு நக்ஷத்திரங்களும், பன்னிரெண்டு ராசிகளும், அரிய சிற்ப லக்ஷணத்தோடு கூடியன. தெற்குப் பிரகாரத்தில், எழுபத்து மூவர் விக்கிரகங்கள், மிகுந்த சிற்பலக்ஷண மமைந்துள்ளதாய்ப் பிரதிஷ்டை செய்திருக்கின்றது. உற்சவ விக்கிரகங்களும், பெரும்பாலும் நன்கு அழகிய சிற்ப

லக்ஷணம் படைத்ததாகவே இருக்கின்றது. எழு பத்து மூவருக்குப்பின்னுகைச் சுவற்றில், அறுபத்து மூன்று நாயன்மார்கள் தொண்டுகளேயும், சிறப்பு களேயும், விளக்கிக் காட்டும் உருவமைந்த, சித்திரங் கள் மிகவும் அழகாக வரையப்பட்டுள்ளன. இன் னும் மேலேப் பிரகாரத்தில், சுவாமிக்குப் பின்னுக ஸ்ரீ நடராஜமூர்த்தி ஆனந்தத் தாண்டவமும், ஊர்த் துவ தாண்டவமும், காலசம்ஹாரமூர்த்தியும், சந்திர சேகர மூர்த்தியும், தக்ஷிணுமூர்த்தியும், வீரபத்திர சுவாமியும், கெஜஸம்ஹார மூர்த்தியும், ஸ்ரீ தேவீ பூதேவீ சமேத ஸ்ரீ மகாவிஷ்ணுவும், ஸ்ரீ ராமரும் தலபுராணச் சரித்திரத்தைக் குறிக்கும் சில சித்திரங் களும், மிக்க அழகாக வரையப்பட் டிருக்கின்றன.

## புராண வரலாறு

இத்தலத்திற்கு ஸ்தல புராணம் சம்ஸ்கிருதத் திலும் தமிழில் செய்யுளாக 4000-பாடல் புத்தக மும், 1000-பாடல் புத்தகமும். உரைநடை புத்தகமு மிருக்கின்றது. இத்தலமான்மியம், பரமபதியாகிய சிவபெருமான் விஷ்ணுமூர்த்திக்கு உபதேசிக்க, அவர் வேதவியாசருக்குச் சொல்ல அவர் எனக்குச் சொன்ன பிரகாம் சொல்லுகின்றே னென்று சூதமுனிவர், நைமிசாரணிய வாசிகளாகிய முனிபுங்க வர்களுக்குச் சொன்னபடி, நாரதர், மாந்தாதாவுக்கு எடுத்துச் சொன்னதாக, ஸ்காந்தத்தில் விளங்கக் காணலாம்.

## தல விசேடம்

விஷ்ணு பிர்மா நான்கு வேதங்கள் இந்திரன் முதலான அஷ்டதிக்கு பாலகர்கள், அஷ்டவசுக்கள்

5173 022'3Y.4H7Y

சந்திர ஆதித்தர் ஆதிய நவக்கிரகங்கள். அனும, கவய, கவாக்ஷ, அங்கதாதி அநேகவானர சேனுதிபதிகள், அகஸ்திய, புலஸ்திய, கௌதம, வசிஷ்ட, விஸ்வாமித்திர, உத்தால, நாசிகேது. கக்ஷீவ, தும்புரு நாரதாதி அநேக மகரிஷிகள். மனு, மாந்தாதா, தசரதர், ராமர், பஞ்சபாண்டவர்கள், மகாபலி, முசுகுந்தன், முதலாகிய சக்ரவர்த்திகள். சேர, சோழ, பாண்டியர்கள் முதலான அரசர்களும், பூஜித்து இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றதும், திரிசங்கு, சௌதாசன், மகாபலி, சீதாபதி, முசுகுந்தன், பிரமசாரி, மேற்படியாரின் மாதா, கோலாகலன், நாரதர், சனந்தாதி, சுதேவ, வசுதேவாதி, அநேகர்கள் முத்திக்கேதுவாகிய பலப் பிராப்தியைப் பெற்றதும், கங்கையாதி புண்ணிய நதிகள் யாவும், பூமியிலுள்ளவர்கள் ஆங்காங்குத் தங்களிடத்து மூழ்கி விடுத்த பாபங்களைப் போக்கிக் கொள்ளவேண்டி, ஸ்நானஞ்செய்து, பரிசுத்தமடைந்த மணிகர்ணிகை, வேதநதி, வேதாம்ருதம் முதலான, அநேகத் தீர்த்தங்களை யுடையதும். வீதிவலம் வருதல் மிக்க விசேடமுள்ளதும், திருவிளக்குத் தூண்டிய எலிக்குத், திரிலோகாதிபதியத்தை அளித்ததும், அகஸ்திய முனிவருக்குத் திருமணக்கோலக் காக்ஷி காட்டியருளியதும், நான்கு வேதங்களால் பூஜித்துத் திருக்காப்பிட்ட திருக்கதவு திருநாவுக்கரசுநாயனர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் இருவர்களாலும் திறக்கவும், அடைக்கவும் பாடி யருளிய அற்புத மமைந்துள்ளதும் ஆகிய அநேகம் விசேடங்களைக் கொண்டது. இன்னும், சப்தவிடங்கத் தலங்களில் இரண்

டாவதாக விளங்கும், ஸ்ரீ புவனிவிடங்கத் தியாக ராஜப் பெருமான், எழுந்தருளியிருக்கும் பெருமை வாய்ந்ததாயுமுள்ளது. தேவர்கள் பொருட்டுப் பதி ஞறு சபைகளில் ஒன்ருகவும் மிகவும் மேன்மை வாய்ந்ததாகவும், பன்னிரெண்டாவது சபையாய் விளங்குவதும், தேவபக்த சபையென்னும் நாம முள்ளதும் ஆகிய இவ்விடத்து ஸ்ரீ நடராஜப் பெரு மான் சாந்நித்தியங் கொண்டு ஆனந்தத் தாண்டவம் புரிந்து வருவதும் சத்திபீடம் அறுபத்து நான்கில் மிக்க விசேடமமைந்த சுந்தரிபீடம்வாய்ந்த பெருமை பெற்றதுமாகிய அளவிறந்த மேன்மையையும் உடையது.

## மூர்த்தி விசேடம்

சகல பிரபஞ்சங்களும், சகல பிரபஞ்ச கர்த்தர் களும், சரம், அசரம் என்று சொல்லப்பட்ட சகல ஜீவகோடிகளும், சிருஷ்டிகாலத்தும், சங்கார காலத் தும் இச்சிவலிங்கத் திருவுருவினின்று தோன்றி யும் ஒடுங்கியும் வருவதாகக் கூறப்பட்டிருக்கும் பெரு மையை யுடையதும். உலகோற்பத்திக் கேதுவாய் ஒலிவடிவான வேதங்களும் புருஷாகாரமாய் வந்து பூஜித்துச் சித்திபெற்றதென்ருல், இம்மூர்த்தியினது பெருமை ஆதிசேடனுலும் அளவிட்டுக் கற்பகோடி காலம் சொன்னுலும் முடியாதென்று முன்னோர்க ளால் சொல்லியது, உண்மையேயாம்.

## குழகர் கோயில் உற்பத்தி வரலாறு

முன் ஒருசமயம், தேவர்களும், அசுரர்களும், ஒன்றுசேர்ந்து திருப்பாற்கடலைக் கடைய அத

னின்று மெழுந்த காமதேனு, கற்பக விருக்ஷம், சிந்தாமணி, ஐராவதம், உச்சைச்சிரவம், சந்திரன், கௌஸ்துபமணி, அப்ஸரஸ்ஸு, மூதேவி, ஆலகால விஷம், இலக்குமி, தன்வந்திரி முதலானவைக்குப் பின்னர், திரவமாயும், கடினமாயும், இரண்டுவித அமிர்தம் தோன்றியது. உடனே கடினமான அமிர்தத்தை ஒரு குடத்தில் வைத்து வாயுவினிடங் கொடுத்து இந்திரனுடைய அந்தப்புரத்தில் வைக்கும்படி, விஷ்ணுவானவர் ஆக்ஞாபித்தவாறு, வாயுபகவான், வேகமாகக் கொண்டு போகும்பொழுது, அமிர்த கலசமானது, வேதவனத்தில், தவறி விழுந்து விட்டது. அப்பொழுது, வாயு பகவானும். பின்னுக வந்த தேவர்களும் பார்த்துப் பயந்து நடுங்கி வருத்தமுற்று நிற்க. விஷ்ணுவானவர், இஃது வாயுவினுடைய அஜாக்கிரதை யன்று. ஜகதீசன் ஆக்ஞை. நீங்கள் பயப்படவேண்டாமென் றுரைக்க, உடனே ஈசன், அமிருதலிங்கமாகத் தோன்றினர். அப்பொழுது தேவர்கள், வெகு விதமாகத் தோத்தரிக்க, ஈசன் பிரசன்னராகி, நான் அமிர்தேசனென்கிற பெயரோடுகூட இவ்விடத்தில் வசிக்கின்றேன் என்னுடைய வாசத்தால் இதற்கு உருத்திரகோடி யென்று பெயர் ஏற்படப் போகின்றது. இதில் ஸ்நானஞ் செய்தால் மகா மேன்மையை அடைவதோடு சத்துரு பயமும் நீங்குமென்று, அனுக்கிரகித்துவிட்டு மறைந்தார். பின்னர் குளக முனிவர் வந்து பூஜித்துப் பேறு பெற்றதால், குளகர் கோவில் என்றுங் காரணப் பெயரையுங் கொண்டது.

## அகஸ்தியான் பள்ளி உற்பத்தி வரலாறு

இத்தலத்தில், அகஸ்தியமுனிவர் வந்து, பர்ணசாலைக் கட்டிக்கொண்டு தவஞ் செய்துகொண்டிருந்தார், வேதவனேசர் ஆக்ஞையின் பிரகாரம் அகஸ்திய முனிவருக்குத் திருமணக்கோலங் காட்டியருளத் தெரிசித்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் தவறாது வந்து தெரிசித்துக்கொண்டும் அவ்விடத்தில் அக்னி புரீசுவரர் என்னும் லிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து, பூஜித்து இஷ்டசித்திகளைப் பெற்றதால், அகஸ்தியம் பள்ளி என்னும் நாமத்தையும் பெற்றது. இவ்வித மூர்த்தி விசேடங்களைக் கொண்டுள்ளதாம்,

## தீர்த்த விசேடம்

இங்குள்ள தீர்த்தங்கள். சிவசத்தி சொரூபமாய், ஆறு யாத்திரைகளும், ஆறு ஆதாரத்தைக் குறித்ததாயும், தொண்ணூற்றியாறு தீர்த்தங்களும், தொண்ணூற்றியாறு தத்வத்தை விளக்கிக் கொண்டும். தம்மை வந்தடைந் தோர்க்கு, இம்மை மறுமைப் பயன்களை அளிப்பது சுருதியாலும், அனுபோகத்தாலும், விளங்கி வருகின்றது. தீர்த்தங்களும், அவைகளில் ஸ்நானஞ் செய்வதாலடையக்கூடிய பலப்பிராப்தியும், பின்வருமாறு கண்டுகொள்க.

# தீர்த்தங்களின் பெயரும் அத்தீர்த்த ஸ்நானத்தால் அடையும் பலப் பிராப்தியும்.

## 1. அந்தர்க் கிரக யாத்திரை.

1. வேத நதி - அளவிலாத இன்பம்.
2. இந்திர தீர்த்தம் - பிரமபதத்தில் இருப்பார்.
3. நள தீர்த்தம் - பாவங்கள் நீங்கும்.
4. அகஸ்திய கூபம் - சாலோக பதவி.
5. அசுவினி தீர்த்தம் - கொடு நோய் தீரும்.
6. வியாச தீர்த்தம் - பிரமலோகம் பெறுவார்.
7. அங்கத தீர்த்தம் - விஷ்ணு பதம் தரும்.
8. சுக்கிரீவ தீர்த்தம் - இந்திரனோடு சமாசனம் தரும்.
9. சனி தீர்த்தம் - தலைவனாகச் செய்யும்.
10. வேதாமிருதம் - சிவபதம் அளிக்கும்.
11. அம்சுமான் தீர்த்தம் - அஸ்வமேதயாகப் பலன்.
12. பாண்டவ தீர்த்தம் - காரிய ஜெயம்.
13. ககூிவான் தீர்த்தம் - இஷ்டசித்தி எய்தும்.
14. விஸ்வாமித்திர தீர்த்தம் - இந்திரலோக பதவி.
15. அமிருதகூபம் - இந்திரப் பட்டம்.
16. பரமானந்த கூபம் - சிவஞானமுண்டாகும்.
17. மணிகர்ணிகை - அநேக பலன் கிடைக்கும்.
18. திரிகோடி தீர்த்தம் - சகல தீர்த்த ஸ்நான பலன்களும், பிர்ம்மாதிக பதங்களும் கிடைக்கும்.

## 2. விஷ்ணு யாத்திரை.

1. வேதாமிருதம் - அனந்தம்.
2. பைரவ தீர்த்தம் - பாவம் முழுதும் நீங்கிச் சிவலோகம்.

3. அனும தீர்த்தம் - பாவம் போக்கிப் பிரமலோக சித்தி.
4. குபேர தீர்த்தம் - கைலாசம் சேர்வர்.
5. ராம தீர்த்தம் - விஷ்ணு லோகம்.
6. இலக்குமண தீர்த்தம் - இதுவுமதுவே.
7. சீதா தீர்த்தம் - இதுவுமதுவே.
8. ரணமோசன தீர்த்தம் - ரணங்கள் நீங்கி இஷ்ட சித்தி.
9. சங்கமம் ஈசான தீர்த்தம் - ருத்திரபதந் தருவம்.
10. கும்த தீர்த்தம் - முத்தி எளிதிற்றரும்
11. அம்சுமான் தீர்த்தம் - அஸ்வமேதயாகப் பலன்.
12. மணிகர்ணிகை - அநேக பலன்.

## 3. சேது யாத்திரை.

1. மணிகர்ணிகை - அநேக பலன்.
2. அகஸ்திய கூபம் - சாலோக பதம்.
3. வேதநதி - அளவில் அனுக்கிரகம்.
4. அக்கினி தீர்த்தம் - சகல பாபங்களையும் நீக்கும்.
5. ருத்திர கோடி - பிறவி நீங்கும்.
6. சேது தீர்த்தம் - அளவிறந்த பலன்.
7. சித்தாஸ்ரமம் - ஜபசித்தி முத்தி தரும்.
8. ஏகாதசருத்திர தீர்த்தம் - மோக்ஷந் தரும்.
9. அமுத புஷ்க்கரணி - இந்திர பதந்தரும்.
10. கௌள தீர்த்தம் - சிவசாமீபம் அடைவர்.
11. உமாசரஸ் - சிவமாவர்.
12. துவாதசாதி தீர்த்தம் - லக்ஷ்மீகரமும் பிரகாசமுமடைவர்
13. அக்கினி புஷ்க்கரணி - சிவசாரூப மளிக்கும்.
14. இயம தீர்த்தம் - பிர்ம்மலோகந் தரும்.
15. தும்புருத தீர்த்தம் - கந்தர்வ வாழ்வு தரும்.
16. நாரத தீர்த்தம் - இதுவு மதுவே.
17. மணிகர்ணிகை - அநேக பலன்.

## 4. தெக்ஷிணமாநச யாத்திரை.

| | |
|---|---|
| 1. விஸ்வாமித்திர தீர்த்தம் | - இந்திரலோகம். |
| 2. மரீச தீர்த்தம் | - இந்திரலோகம். |
| 3. நிருதி தீர்த்தம் | - இந்திரலோகம். |
| 4. சப்த சாகர தீர்த்தம் | - பிர்ம்மலோகம் பெற்று வாழ்வர் |
| 5. மனு தீர்த்தம் | - தலைவராவர். |
| 6. சம்ஞை தீர்த்தம் | - மனோசங்கற்பம் பூர்த்தியாகும். |
| 7. சூரிய புஷ்க்கரணி | - கைலாயகிரி சேர்குவர். |
| 8. சந்திர புஷ்க்கரணி | - சந்திரலோகம் சித்திக்கும். |
| 9. நீல தீர்த்தம் | - பிர்ம்மாவுக்குச் சாமியமாய் விளங்கச் செய்யும். |
| 10. அஞ்ஞான மோசன தீர்த்தம் | - பிர்மாவுக்குச் சாமியமாய் விளங்கச் செய்யும். |
| 11. கலி நாசன தீர்த்தம். | - இதுவு மதுவே |
| 12. விசுவ தீர்த்தம் | - இதுவு மதுவே |
| 13. சப்த மருத்துவ தீர்த்தம் | - இந்திரனுக்சும். |
| 14. சம்பவ தீர்த்தம் | - மோக்ஷ வழி காட்டும். |
| 15. சுஷேண தீர்த்தம் | - முத்தி கொடுக்கும். |
| 16. வருண தீர்த்தம் | - பிர்ம்ம சாமீப மடைவர். |
| 17. பாரத்துவாச தீர்த்தம் | - புத்திரப்பேறு தரும். |
| 18. மணிகர்னிகை | - அநேக பலன் தரும். |

## 5. பிரம யாத்திரை.

| | |
|---|---|
| 1. கவய தீர்த்தம் | - பிங்கலன் அருகு சேர்க்கும். |
| 2. கவாக்ஷ தீர்த்தம் | - இதுவும் மதுவே. |
| 3. கந்தமாதன தீர்த்தம் | - சந்திர பதந்தரும். |
| 4. மருத்துவ தீர்த்தம் | - சந்திர பதந் தரும். |
| 5. வாயு தீர்த்தம் | - சிவ பதந் தரும். |
| 6. பிர்ம்ம தீர்த்தம் | - பிறர் மனைவியை மோகித்த பாவம் நீக்கும். |

7. சரஸ்வதி தீர்த்தம் - கவி சொல்ல வல்லவராக்கும்.
8. பிர்ம்ம சரஸ் - சிவலோகம் சேர்க்கும்.
9. பிர்ம்ம குண்டம் - இதுவு மதுவே.
10. அஷ்டவஸு தீர்த்தம் - பிர்ம்மலோக வாசந்தரும்.
11. காசிபர் தீர்த்தர். - பிர்மாவைப் போல் விளங்க வைக்கும்.
12. காசிபர் பத்தினி தீர்த்தம். - இதுவு மதுவே.
13. அதிதி தீர்த்தம் - விஷ்ணுபதமடைவர்.
14. இலக்குமி தீர்த்தம் - இதுவு மதுவே.
15. காளி தீர்த்தம - துன்பங்கள் நீங்கிச் சாலோகம் உறுவர்.
16. தரும தீர்த்தம் - சாலோக முறுவர்.
17. பாவநாச தீர்த்தம் - தீவல்வினைகளெல்லாம் நீங்கும்.
18. மைந்தன் தீர்த்தம் - கோலோக மடைவர்.
19. ஞானவாவி தீர்த்தம் - ஷை.
20. துவித தீர்த்தம் - விண்ணுலகளிக்கும்.
21. மணிகர்ணிகை - அநேக பலன் கிடைக்கும்.

## 6. உத்தரமானச யாத்திரை.

1. வேதா மிருதம் - பிரமபதந் தரும்.
2. புலத்தியர் தீர்த்தம் - விஷ்ணுபதந் தரும்.
3. புலக தீர்த்தம் - பிரமலோக வாசம்.
4. அங்கிரா தீர்த்தம் - பிரமலோக வாசியாக்கும்.
5. உசத்திய தீர்த்தம் - பிரமலோக வாசம்.
6. குரு தீர்த்தம் - பிரமபதந்தரும்.
7. சுக்கிர தீர்த்தம் - சத்திபதந் தரும்.
8. துர்க்கா தீர்த்தம் - முதல்வராக்கும்.
9. ருத்திர தீர்த்தம் - சிவசாரூபம்.
10. காலாக்னிருத்திர பட்டம் - பாவம் நீங்கிச் சிவசாரூப மடைவர்.

11. பராசரன் தீர்த்தம் - பிரமபதத்திலிருத்தும்.
12. வசிஷ்ட தீர்த்தம் - பிர்ம்மமாகுவர்.
13. கௌதம தீர்த்தம் - ஞானமுண்டாகும்.
14. வேதாமிருதம் - பிரமபதந்தரும்.
15. மணிகர்னிகை - அநேக பலன் தரும்.

## வழிபாட்டால் பெறும் பயன்கள்.

இங்கேயுள்ள மூர்த்திகளை வழிபடுவோர்கள் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தவர்கள், இத்தலத்தில் வசித்தோர்கள், ஒரு க்ஷணப்போது தங்கியிருந்தோர்கள், யாவரும். பாதகம், சமபாதகம், உபபாதகம், மகாபாதகம், முதலிய மகா பாபங்கள் நீங்கி, வேண்டிய யாங்குப் பலப்பிராப்தி யடையப்பெற்று, இகபோகமும், பரமுத்தியும் எய்தி இன்புறுவர். இதன் விரிவை, தலம், மூர்த்தி, தீர்த்தம் முதலிய இடங்களிலும் கண்டுகொள்க. இன்னும் மாசப் பிறப்பு, விஷு புண்யகாலம், அமாவாசை, பௌர்ணமி, கார்த்திகை, மகாசிவராத்திரி, பிரதோஷம், மார்கழிமாதம் வியதீபாத புண்ணிகாலம், சோமவாரம், சுக்கிரவாரம், புரட்டாசி மாதத்தில் வரும் திறைபணி, மாசிமாதத்தில் மகோற்சவம், சித்திரை மாதம் சுக்கிலபக்ஷம் சப்தமியில், அகஸ்திய மாமுனிவருக்குக் காட்டியருளிய திருமணக்கோலம், இவைகளில் தெரிசித்து வணங்குவோர், எல்லா நலன்களுமெய்தி, முடிவில் மோக்ஷ வீடடைவர்.

# தலம்பற்றிய தேவாரத் திருப்பதிகங்கள்.

## திருஞானசம்பந்தர்

திருவிராகம் - பண் நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சிலைதனை நடுவிடை நிறுவியோர் சினமலி யரவது கொடுதிவி
தலமலி சுராசுரர்க ளொலி சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ வவருடல் குலைதர வதுநுகர் பவ னெழில்
மலைமலி மதில்புடை தழுவிய மறைவன மமர்தரு பரமனே.

வசையறு மலர்மக ணிலவிய மறைவன மமர்பர மனைநினை
பசையொடு மிகுகலை பலபயில் புலவர்கள் புகழ்வழி வளர்தரு
இசையமர் கழுமல நகரிறை தமிழ்விர கனதுரை யியல்வல
இசைமலி தமிழொருபதும் வலவவ ருலகினி லெழில்பெறுவரே.

திருச்சிற்றம்பலம்.

## கதவடைக்கப்பாடியது.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சதுரம் மறைதான் றுதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன்கிறை வைத்தருள் செய்க வெனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால் வழிபாடு செய்மாமறைக் காடா
உலகே ழுடையாய் கடைதோறு முன்னென்கொல்
தலைசேர் பலிகொண் டதிலுண்டது தானே.

காழிக்ககரான் கலைஞான சம்பந்தன்
வாழிம் மறைக்காடனை வாய்ந் தறிவித்த
வேழின் னிசைமாலை யீரைந்திவை வல்லார்
வாழி யுலகோர் தொழ வானடைவாரே.

திருச்சிற்றம்பலம்.

## கோளறு பதிகம்.

பண் - பியந்தைக் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக
நல்லவீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பி ரெண்டு முடனே
யாசறு நல்லநல்ல வவைநல்லநல்ல வடியா
ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவை மார்பிலங்க வெரு
தேறி யேழையுடனே
பொன் பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுள மேபுகுந் தவதனால்
ஒன்ப தொடொன்றொ டேழுபதி னெட்டொடாறு
முடனாய நாள்க ளவைதான்
அன்பொடு நல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொளாலை விளை செந்நெ
லுன்னிவளர் செம்பொ னெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து மறைஞான
ஞான முனிவன்.

மூனுறு கோளுநாளு மடியாரை வந்து நலியாத
வண்ண முரைசெய்
ஆனசொன் மாலேயோது மடியார்கள் வானி லரசாள்
வாரணை நமதே.

திருச்சிற்றம்பலம்.

பண் - பியந்தைக் காந்தாரம்.

பொங்கு வெண்மணற் கானல்பொரு கடற்றிரை தவழ்முத்தங்
கங்குலா ரிருள்போழுங் கலிமறைக் காடமர்ந் தார்தாந்
திங்கள் சூடினரேனுந் திரிபுர மெரித்தன ரேனும்
எங்கு மெங்கள் பிரானுர் புகழலதிகழ் பழியிலரே.

மையுலாம் பொழில் சூழ்ந்த மாமறைக்
காடமர்ந் தாரைக்
கையினற் ருெழுதெழுவான் காழியுள்
ஞான சம்பந்தன்
செய்த செந்தமிழ் பத்துஞ் சிந்தையுட் சேர்க்க
வல்லார் போய்ப்
பொய்யில் வானவரோடும் புகவலர்
கொளவலர் புகழே......

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கற்பொலி சுரத்தி னெரிகானரி னிடைமாநடம
தாடி மடவார்
இற்பலி கொளப்புகுது மெந்தை பெருமான திட
மெனிபுர் புவிமேல்
மற்பொலி கலிக்கடன் மலைக்குவ டெனத்திரை
கொழித்த மணியை
விற்பொலி நுதற்கொடியிடைக் கணிகைமார்
கவரும் வேதவனமே

கத்திரிகை துத்திரிகறங்கு துடிதக்கை
யொடிடக்கை படகம்
யெத்தனை யுலப்பில் கருவித் திரளலம்ப
விமையோர்கள் பரச
வொத்தர மிதித்து நடமிட்ட வொருவர்க்
கிடம தென்ப குலகில்
மெய்த்தகைய பத்தரொடு சித்தர்கள் மிடைந்
துகளும் வேதவனமே.

மத்தமுழ வங்கடல் வழங்கெழுவு காழிபதி
மன்னுகவுணி
வெந்தபொடி நீறணியும் வேதவனமே வுசிவ
னின்னருளினல்
சந்தமிவை தண்டமிழினின் னிசையெனப்
பாவு பாடலுலகிற்
பந்தனுரை கொண்டு மொழிவார்கள் பயில்
வார்களுயர் வானுலகமே.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு.

பண் - நேரிசை.

திருச்சிற்றம்பலம்.

இந்திரனேடு தேவரிருடிக ளேத்து கின்ற
சுந்தரரானர் போலுந் துதிக்கலாஞ் சோதிபோலும்
சந்திரனேடு கங்கை யரவையுஞ் சடையுள்வைத்து
மந்திரமானர் போலும் மாமறைக் காடனரே.

பிணியுடை யாக்கை தன்னைப் பிறப்பறுத் துய்ய வேண்டிற்
பணியுடைத் தொழில்கள் பூண்டு பத்தர்கள் பற்றினலே
துணிவுடையாக்கனேடி யெடுத்தலுக் தோகையஞ்ச
மணிமுடிப் பத்திறுத்தார் மாமறைக் காடனரே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

தேரையுமேல் கடாவித் திண்ணமாத் தெளிந்து நோக்கி
யாரையு மேலுணரா வாண்மையயான் மிக்கான் றன்னைப்
பாரையும் விண்ணுமஞ்சப் பரந்ததோள் முடியடர்த்துக்
காரிகை யஞ்சலென்பார் கலிமறைக் காடனாரே.

கங்கைநீர் சடையுள் வைக்கக் காண்டலு மங்கையூடத்
தெங்கை யான்றேர் கடாவிச் சென்றெடுத்தான் மலையை
முன்கை யானரம்பு வெட்டி முன்னிருக் கிசைகள்பாட
அங்கைவா ளருளினா னாரணிமறைக் காடுதானே.

திருச்சிற்றம்பலம்.

பண் - குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஓதமால் கடல்பரவி யுலகெலாம்
மாதரார் வலங்கொண் மறைக்காடரைக்
காதல் செய்து கருதப்படு மவர்
பாத மேத்தப் பறையுநம் பாவமே.

குறைக் காட்டான் விட்டதேர் குத்தமாமலை
இறைக்காட்டி யெடுத்தான்றலை யீரைந்தும்
மறைக் காட்டா னிறையூன்றலும் வாய் விட்டான்
இறை காட்டாயெம் பிரானுனை யேத்தவே.

திருச்சிற்றம்பலம்.

## கதவு திறக்கப்பாடியது.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர் மொழி யாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணினா லுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

அரக்கனை விரலா லடர்த் திட்ட நீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெருமா னீரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கதவம் திறப்பிம் மினே.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு - பண் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளாமணி தான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற வெளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக் காட்டுறையும் மணாளன்றானே.

ஆடல் மால்யானை யுரித்தான் கண்டாய்
அகத்தியான் பள்ளி யமர்ந்தான் கண்டாய்
கோடியான் கண்டாய் குளகன் கண்டாய்
குளிராரூர்க் கோயிலாக் கொண்டான் கண்டாய்
நாடிய நன்பொருள்க ளானான் கண்டாய்
நன்மையோ டிம்மை மற்றம்மை யெல்லாம்
வாடிய வாட்டந் தவிர்ப்பான் கண்டாய்
மறைக்காட் டுறையுமணாளன் றானே. ௪

அயனவனு மாலுமறியா வண்ண மாரழலாய்
நீண்டு கந்த வண்ணல் கண்டாய்
துயரிலங்கை வேந்தன் றுலங்க வன்று
சோதி விரலாலுற வைத்தான் கண்டாய்

பெயரவர்க்குப் பேரருள்கள் செய்தான் கண்டாய்
பேரும் பெரும்படையோ டீந்தான் கண்டாய்
மயருறு வல்வினை நோய் தீர்ப்பான் கண்டாய்
மறைக் காட்டுறையு மணாளன் றானே.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சுந்தரர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

யாழைப் பழித்தன்ன மொழிமங்கை யொருபங்கன்
பேழைச் சடைமுடி மேற்பிறை வைத்தானிடம் பேணிற்
றாழைப் பொழிலூடே சென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக் குரங்குண்ணும் மறைக்காடே.

பாரூர்பல புடைசூழ் வளவயனாவலர் வேந்தன்
வாரூர் வனமுலை யாளுமை பங்கன் மறைக்காட்டை
யாரூரன் தமிழ்மாலைகள் பாடும் மடித்தொண்டர்
கீரூர் தருநிலனே டுயர்புகழாகுவர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

## திரு அகத்தியான் பள்ளி

திருஞானசம்பந்தர் - பண் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

வாடிய வெண்டலை மாலைசூடி மயங்கிருள்
நீடுயர் கொள்ளி விளக்குமாக நிவந்தெரி
யாடிய வெம்பெருமா னகத்தியான் பள்ளியைப்
பாடிய சிந்தையினார் கட்கில்லையாம் பாவமே.

ஞாலமல்குந் தமிழ்ஞான சம்பந்த ன்மாமயில்
ஆலும்சோலை புடைசூ ழகத்தியான் பள்ளியுட்
சூலநல்ல படையான் அடிதொழு தேத்திய
மாலைவல் லாரவர் தங்கள் மேல்வினை மாயுமே.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கோடிக் குழகர்

ஸ்ரீ சுந்தரர் - கொல்லி

திருச்சிற்றம்பலம்.

கடிதாய்க் கடற்காற்றுவந் தெற்றக் கரைமேற்
குடிதானயலே யிருந்தாற் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேளு மக்கார் துணையாக விருந்திரே.

மையார் தடங்கண்ணி பங்கா கங்கை யாளும்
மெய்யாகத் திருந்தனள் வேறிடமில்லை
கையார் வளைக்காடு காளோடும் முடனாய்க்
கொய்யார் பொழிற் கோடியே கோயில் கொண்டாயே.

பாரூர் மலிசூழ் மறைக் காடதன் றென்பால்
ஏரார் பொழில்சூழ் தரு கோடிக்குழகை
யாரூர னுரைத்தன பத்திவை வல்லார்
சீரார் சிவலோகத் திருப்பவர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

## தல புராணம்.

திருச்சிற்றம்பலம்.

தொழும் பிரயாகை சுடர் தருங்காசி சுருதியாய்க்
குடந்தை வன்மீகம்
செழுஞ் சுடர் நடஞ் செய் சிதம்பரம்
வழிசெறிந்திட திரைக் கடலூழி
விழுங்கிய காலம் மற்றைய விலிங்க மேதகு
மறைமுதனாலு
மழுங்கற விதன் பாலடைந் துடைந் தொழியாதாக்கு
மூற்றிலங்கிடு மன்றே.

ஒருகண மதனிற் பாதியே நிமிடமோதிய
வதனரை யேனும்
திருகிய வெயிலுக் குடைந்து காலாற்றச் செறிநிழற்
கொதுங்கின ரேனும்
கருமலி பிறவி கடந்து வீட்டைவர் கலிவலி
மெலிதரக்காயும்
பொருவரு மறைசை மாதமோர் வருடம் பொருந்திடிற்
புகல்வது முளதோ.

கொலையொடு களவு கள்ளுண்குரு நிந்தையுடன்
பொய்யென்றே
யுலகினி லிவையைந்தாக யுரைக்கு
மா பாதகங்கள்
விலகிடு மொருக்கால் வேதவனமென
நினைக்கில் வேறங்
கலகில் பாதகங்கணீங்கு மென்பதற்
கறைவ தென்னோ.

காசியி லிறக்க முத்தி கமலையிற் பிறக்க முத்தி
தேசுறு சிதம்பரத்தைத் தெரிசிக்க முத்தியாகும்
மாசிலா மேன்மை பூண்ட மறைசையம் பதியோ கூறில்
ஆசறு தீர்த்தந் தன்னிலாடவே யளிக்கு முத்தி.

வேதமா நதியேயாதி மறைவனமேய தீர்த்தம்
நீதியாற் படிந்து வேத நிமலனைப் பணிந்து போற்றிப்
பாதகமனைத்து நீங்கிப் பாகதி யோகம் ஞானம்
யேதமில் சித்தி செல்வம் பெற்றவ ரெண்ணி லாதார்.

தீங்கு தீர்தாத் திருமறைக் காட் டுறை தேவைப்
பாங்கு சூழ்வலஞ் செய்திடிற் பாத வைப் பொன்றிற்கு
ஓங்கு வேள்விக ளொருபதி னுயிர முனுற்றத்
தாங்கு புண்ணிய மனைத்தையுஞ் சார்குவர் சரதம்.

என்னையோர் பொருளாய் வந்தி
　　இயல் மணவாளக் கோலந்
தன்னையின் றெனக்களித்த
　　தாணுவே போற்றி திங்கள்
மன்னு செஞ்சடையாய் போற்றி
　　மறைதொழு மணாளா போற்றி
நன்னுதல் பாகா போற்றி
　　நாதனே போற்றி யென்று.

வேத நாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறுசமயங்கள் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான் செய்
பாதக மனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

நரைதிரை வருமுன் போதம் நழுவுமுன் புலன்கள் கூற்றஞ்
சருவு முன்னுதலாலே தையலார் மக்கள் சுற்றம்
பொருவரும் செல்வம் யாவும் பொய்யெனக் கருதி நீத்து
மருவுக வின்பம் வேண்டி மறைவன மறிஞரானோர்.


## வாழ்த்து

வைதிக சைவ மெங்கும் வழங்குக மன்னர் செங்கோல்
செய்திகல் நிகழா தோங்கத் திங்கள் மும்மாரி பெய்க
கைதவ நெறி முற்றாழ்கக் கருது நன்னெறியே வாழ்க
மெய்திக ழஞ்செழுத்து விளங்குக வெண்ணீ றெங்கும்.

திருச்சிற்றம்பலம்.

சுபம்!　　சுபம்!!　　சுபம்!!

...Y
6 FEB 1955



உயர் திருவாளர்:

**N. V. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்**

**திருவுருவப்படம்.**